வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 03.08.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 242 | பக்கங்கள் : 16







# 2024 ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க வேண்டும் மைத்திரி

## சு.க. உறுப்பினர்கள் அழைப்பு



கொழும்பு, ஓகஸ்ட் 03

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்களால் கட்சியின் தலைவர் மைத்திரிபாலவுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் காலி மாவட்ட கூட்டம் நடைபெற்றபோது, பிரதேச சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு இவ்வாறு வேண்டிக்கொண்டுள்ளனர்.

தமது வேண்டுகோளுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால இதுவரையில் பதிலளிக்கவில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் திசர குணசிங்க தெரிவித்துள்ளார். (இ)



### ஐரோப்பிய ஒன்றிய பரிந்துரைகளில்

# இலங்கை நலன்களை பாதுகாக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 03

சர்வதேச நியமங்கள் பின்பற்றப்பட வேண்டிய அதேவேளை, இலங்கை கடற்றொழிலாளர்கள் மற்றும் நாட்டின் நலன்களையும் கருத்தில் கொண்டு ஒழுங்கு விதிகளும் கட்டுப்பாடுகளும் வரையறுக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சர்வதேச கடற்பரப்பில் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற இலங்கை கடற்றொழிலாளர்கள் பின்பற்ற வேண்டிய சர்வதேச நியமங்களை மீள்திருத்தம் செய்வது தொடர்பான கலந்துரையாடலின் போதே,

15

# யாழில் 52 பேர் உட்பட வடக்கில் 72 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஓக. 03

யாழ்ப்பாணத்தில் 52 பேர் உட்பட வடக்கில் 72 பேர் நேற்றைய தினம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழகங்களின் ஆய்வகங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே இந்த விடயம் தெரியவந்தது.

யாழ். போதனா மருத்துவமனையில் 294 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 66 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

இதன்படி,

15

# கோவக்ஸ் ஊடாக இலங்கைக்கு மேலுமொரு தொகுதி தடுப்பூசி

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 03

உலக சுகாதார அமைப்பின் தலைமையிலான கோவக்ஸ் தடுப்பூசி நன்கொடைத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு மேலும் ஒரு தொகுதி தடுப்பூசியை அமெரிக்கா வழங்கும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவை நேற்று சந்தித்தபோது அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில்

15

# சிறுவர்களுக்கு தொற்று பரவும் வீதம் அதிகரிப்பு

## நாளாந்தம் 15 சிறுவர்கள் அடையாளம்

கொழும்பு, ஓக. 03

இலங்கையில் சிறுவர்களுக்கு கொரோனாத் தொற்று பரவும் வீதம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நாளாந்தம் கொரோனா தொற்றுடன் 15 சிறுவர்கள் அடையாளம் காணப்படுகின்றனரென சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் மத்தியில் கொரோனா

15

# யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் தொற்றால் மரணம்

யாழ்ப்பாணம், ஓக. 03

யாழ்ப்பாணத்தில் மேலும் ஒருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சுண்டுக்குளியைச் சேர்ந்த 83 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 130ஆக உயர்வடைந்துள்ளது. (அ)

# நேற்று 2,382 பேருக்கு தொற்று

கொழும்பு, ஓக. 03.

நாட்டில் மேலும் 2 ஆயிரத்து 382 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3லட்சத்து 13 ஆயிரத்து 731 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை,

15

# மேலும் 63 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஓக. 03

நாட்டில் மேலும் 63 பேர் கொரோனாத் தொற்றால் மரணித்தனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 63 பேரில் 36 ஆண்களும், 27 பெண்களும்

15

# பாடசாலைகள் விரைவாக திறக்கப்படுவது அவசியம்

## கல்வி அமைச்சர் அறிவுறுத்து

கொழும்பு, ஓக. 03

முடிந்தளவு விரைவாக பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும் எனக் கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சர், தற்போதைய சூழ்நிலையில் வசதியற்ற குடும்பங்களில் உள்ள

15

# விசேட நிபுணர்களின் எச்சரிக்கைக்கு மத்தியிலும் திறக்கப்பட்டுள்ளது நாடு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 03

விசேட மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையிலும் நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவையாவன: -

"அரசு எடுத்துள்ள தீர்மானத்தால் நாட்டு மக்களுக்கு கொரோனா வைரஸ் பரவலில் இருந்து பாதுகாப்பு கிடைக்குமா?

கொரோனா வைரஸ் பரவலின் ஆரம்பத்திலிருந்து அரசு சரியான தீர்மானங்களை எடுத்துள்ளதா அல்லது தமக்குத் தேவையான தீர்மானங்களை எடுத்துள்ளதா?

கொரோனா வைரஸ்

15

# இலங்கையின் தடுப்பூசி திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டு!

ஜெனிவா, ஓக. 03

இலங்கையின் தடுப்பூசி திட்டத்துக்கு உலக சுகாதார ஸ்தாபனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் இயக்குநர் டெட்ரோஸ் அதனோம், "செப்ரெம்பர் மாதத்துக்குள் 10 சதவீத மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடுவதற்கான பாதையில் இலங்கை இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். அவர்களின் முயற்சிகளுக்கு நன்றி. மேலும் பொது சுகாதாரம் மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான சமூக நடவடிக்கைகள் குறித்துத் தொடர்ந்தும் விழிப்புடன் இருங்கள்", என்று தனது ருவிட்டர் பதிவில்

15

## இப்படியும் நடக்கிறது...!

இந்தப் பத்தியில் பல தடவைகள் இந்த விடயத்தைப் பற்றி எழுதியாகிவிட்டது. ஆனாலும், சில நண்பர்கள் விடுவதாக இல்லை.

தமிழரல்லாத ஒருவர் வடக்கு மாகாணத்தின் தலைமைச் செயலராக நியமிக்கப்பட்ட விடயம் குறித்து எழுதியிருந்ததைப் படித்துவிட்டு நண்பர் ஒருவர் தொடர்புகொண்டார்.

"தலைவர்கள் என்றால் மக்களின் மனநிலையைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டும். அவ்வாறு புரிந்துகொள்ள முடியாவிட்டால் அவர்கள் நல்ல தலைவர்களாக மிளர முடியாது", என்றார் எடுத்த எடுப்பில்.

"மக்களின் மனநிலையை அறியாமலா தலைவர்கள் இருக்கிறார்கள். தவறாக ஒரு விடயம் நடப்பது பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி அதனைக் கண்டிக்கவேண்டியது தலைவர்களின் கடமை தானே. அதைத்தான் அவர்கள் செய்கிறார்கள்", என்றேன்.

அவர் இடைமறித்தார், "நான் சொல்ல வருவது, மக்களின் மனநிலையைப் பற்றி, தலைவர்களின் மனநிலையைப் பற்றியல்ல என்றவர், சில தலைவர்கள் அந்த விடயத்தையே கண்டுகொள்ளவில்லையே நீங்கள் கவனிக்கவில்லையா", என்றார்.

"அது அவர்களுக்கு மக்கள் நலனில் அக்கறை இல்லை என்று அர்த்தம்", என்றேன்.

அவர் விடாப்பிடியாக விளக்கம் தந்தார்.

அவரைப் பொறுத்தவரை இந்த விடயத்தில் மக்கள் அக்கறைப்படவில்லை. அதிகம் ஏன், அவர்களைப் பொறுத்தவரை சிங்களவர் நியமனமானால் நமக்கு என்ன என்ற நிலைதான். அதனால்தான் அதனைப் புரிந்துகொண்ட தலைவர்கள் சிலர் அதனைக் கண்டுகொள்ளவில்லை என்றார்.

அவர் நியமனம் செய்யப்பட்டபோதே, அந்த விடயத்தை எழுதியபோது, அவர் சிங்களவர் என்பதால் அதனை எதிர்த்திருக்க வேண்டியதில்லை என்று குறிப்பிட்டிருந்தோம். அவரை விட தகுதியானவர்கள் இருக்கும்போது அவரை நியமித்தது தவறு என்று வாதிட்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், அந்த நண்பர் சொன்னது போல, மக்களுக்கு இந்த விடயத்தில் விருப்பமில்லை அல்லது நாட்டமில்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அப்போது அவர் சொன்னது கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது.

நடந்து முடிந்த தேர்தலில் மட்டக்களப்பில் கூட்டமைப்பின் சார்பில் ஏழு பேர் போட்டியிட்டார்கள். ஆனால், வெற்றிபெற்றது இரண்டு பேர் மாத்திரம்தான். தோல்வி அடைந்தவர்களில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து நேர்மையான அதிகாரி என்று பெயரெடுத்த உதயகுமாரும் ஒருவர்.

ஆனால், அதிகூடிய விருப்பு வாக்குளைப் பெற்றவர் ஒரு சிங்களத் தாய்க்கு பிறந்தவர். இதனை ஏன் சொல்கிறேன் என்றால், மக்கள் இதனை எல்லாம் ஒரு விடயமாக இப்போது எடுத்துக்கொள்வதில்லை என்பதைத்தான். தமிழ் மக்கள் இப்போது தாராள மனநிலையில்தான் இருக்கிறார்கள். என நீண்ட விளக்கமளித்தார் நண்பர்.

ஒரு தமிழ் படத்தில் நகைச்சுவை நடிகர் வடிவேலு நடித்த படக்காட்சி ஒன்றுதான் நினைவுக்கு வருகின்றது.

எப்போதும் தன்னை ஒரு சண்டியனாக காட்டிக்கொண்டு ஊரில் வலம் வருவார் வடிவேலு. ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வடிவேலு மற்றவர்களிடம் வாங்கிக் கட்டுவார்.

அவரோடு கூடவே எப்போதும் திரியும் அவரது சகபாடி ஒரு தடவை சொல்லுவார், "அண்ணே, நீங்க ரொம்ப நல்லவர் அண்ணே, எவ்வளவு அடிச்சாலும் தாங்குறீங்கள்...", என்று. தமிழ் மக்களும் ரொம்ப நல்லவர்கள்தான்.

இப்போது நண்பரின் கருத்தோடு முரண்படவும் முடியவில்லை. மக்களின் மனநிலையை அறிந்ததால்தான் சில தலைவர்கள் அந்த விடயத்தில் மூக்கை நுழைக்கவில்லை என்ற நண்பரின் கூற்றையும்தான் நிராகரிக்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி**

# பிறப்பு, இறப்பு சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்ள இணையத்தளம் அறிமுகம்

*கொழும்பு, ஒக. 03*

பிறப்பு, திருமணம் அல்லது மரணச் சான்றிதழ்களின் பிரதிகளை நேற்றிலிருந்து இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கைத்தொலைபேசி அல்லது கணனி ஊடாக பூர்த்தி செய்ய முடிவதுடன், இதற்கான கட்டணங்களையும் இத்திரனியல் அட்டைகள் மூலம் செலுத்த முடியும் எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வாறு விண்ணப்பிக்கப் படும் சான்றிதழ்களின் பிரதி களை, தபால் மூலமாகவோ அருகில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவிலோ பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான கோரிக்கைகளை https://online.ebmd.rgd.gov.lk/ என்ற இணையத்தளம் ஊடாக விண்ணப்பிக்க முடிவதுடன், மேலதிக தகவல்களை www.rgd.gov.lk இணையத்தளம் ஊடாகவும், 011 288 9518 என்ற தொலை பேசி எண் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**03.08.2021**

**செவ்வாய்க்கிழமை**

(CHANNEL-1)

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

## தபால் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 20 பேருக்கு கொரோனா

*பிலியந்தலை, ஒக. 04*

பிலியந்தலை தபால் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 20 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனப் பிலியந் தலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி இந்திக்க எல்லாவல தெரிவித்துள்ளார்.

தபால் நிலையத்தின் பொறுப்பதிகாரி மற்றும் தபால் விநியோகத்தில் ஈடுபடும் ஊழியர்களுக்கு ஏற்பட்ட நோய் அறிகுறிகளையடுத்து மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையிலேயே 20 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து தபால் நிலையம் மூடப்பட்டு கிருமித் தொற்று நீக்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான அனைவரும் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர். தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்று ஆபத்தால் பிலியந் தலை தபால் நிலையத்துக்கு உட்பட்ட உப தபால் நிலையங்களும் மூடப்பட்டுள்ளன. (இ)

## பருத்தித்துறையிலிருந்து வெளி மாகாணங்களுக்கான போக்குவரத்து ஆரம்பம்!

*வடமராட்சி, ஒக. 03*

பருத்தித்துறையிலிருந்து வெளி மாகாணங்களுக்கான போக்குவரத்து சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது.

இதன்படி, நேற்று காலை 4. 30 மணிக்கு திருகோணமலைக்கான சேவையும், காலை 5:00 மணிக்கும் இரவு 8.00 மணிக்கும் கொழும்புக்கான சேவையும், காலை 9.00 மணிக்கு அக்கரைப்பற்றுக்கான சேவையும் பருத்தித்துறையில் இருந்து ஆரம்பமாகின என்று பருத்தித்துறைசாலையின் முகாமையாளர் தெரிவித்தார்.

இதேபோன்று கொழும்பில் இருந்து பருத்தித்துறைக்கான சேவை காலை 8:30 மணிக்கும் இரவு 9.00 மணிக்கும், அக்கரைப்பற்றிலிருந்து பருத்தித்துறைக்கான சேவை பகல் 11 மணிக்கும் இன்று செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

இதேவேளை, திருகோணமலையிலிருந்து பருத்தித்துறைக்கான சேவை நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமானது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ- 2)

**03.08.2021**

**செவ்வாய்க்கிழமை**

(CHANNEL - 2)

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
03.08.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் தலைவர்கள் விழித்துக் கொள்ளாவிட்டால்?

இந்தியாவிற்கான புதிய தூதுவரை நியமிக்கும் விடயம் கிட்டத்தட்ட ஒரு வருடமாக இழுபறி நிலையில் இருந்தது. முன்னாள் அமைச்சரும் பாத் பைன்டர் சிந்தனைக்கூடத்தின் ஸ்தாபகருமான மிலிந்த மொறகொட இந்தியாவிற்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதான செய்திகள் ஆரம்பத்தில் வெளியாகியிருந்தன. குறிப்பாக அவர் அமைச்சரவை அந்தஸ்துடன் நியமிக்கப்பட்டிருக்கிறார் எனவும் கூறப்பட்டது. ஆனால், பின்னர் கொழும்பு ஆங்கில ஊடகங்கள் மொறகொடவின் அமைச்சரவை அந்தஸ்துடன் கூடிய நியமனத்தை புதுடில்லி நிராகரித்திருப்பதாகவும் செய்திகள் வெளியிட்டிருந்தன. எனினும், இந்திய தூதரகம் இந்த விடயத்தை உத்தியோகபூர்வாக தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் மொறகொடவின் நியமனம் கிடப்பிற்கு சென்றது. தொடர்ந்தும் இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் நியமனம் வெற்றிடமாகவே இருந்தது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பொறுப்பேற்றமையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நியமனம் தொடர்பில் ஒருவித மௌனமே நிலவியது. தற்போது மீண்டும் அந்த விடயம் வெளியில் வந்திருக்கின்றது.

விரைவில் மிலிந்த மொறகொட இந்தியாவிற்கான புதிய தூதுவராக பொறுப்பேற்கவுள்ளார் என்றும், இந்திய - இலங்கை உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பான புதிய திட்டமொன்றுடன் அவர் புதுடில்லி செல்லவுள்ளாரெனவும் இந்திய ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவர் எவ்வாறான அந்தஸ்துடன் புதுடில்லி செல்லவுள்ளார் என்பது தொடர்பில் செய்திகள் எவையும் வெளியாகவில்லை.

தமிழ் தலைமைகள் இந்த விடயத்தை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஏனெனில், மிலிந்த மொறகொட 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயங்கள் மிகவும் சிக்கலானவை. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்கு முன்பதாகவே, 13ஆவது திருத்தச்சட்டம் இலங்கைக்கு பொருத்தமற்றது, அது ஊழல் நிறைந்தது, அதனை நீக்க வேண்டும் என்னும் கோரிக்கைகளை மொறகொட பொதுவெளியில் முன்வைத்திருந்தார்.

இவ்வாறான ஒரு விடயத்தை முன்வைத்ததன் விளைவாகவே ஜனாதிபதி கோட்டாபயவிற்கும் அவருக்குமான நெருக்கமும் ஏற்பட்டது. ஜனாதிபதி தேர்திலில் கோட்டாபய வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, மொரகொடவை இந்தியாவிற்கான அமைச்சரவை அந்தஸ்துள்ள தூதுவராக நியமித்திருந்தார். இந்த விடயமே பின்னர் கிடப்பிற்கு சென்றிருறந்தது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ந்தும் 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபை முறைமை தொடர்பில் உண்மையான ஈடுபாடில்லாமல், உதட்டளவில் மட்டும் உச்சரித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அதனை முற்றிலுமாக இல்லாதொழிப்பதற்கான சிங்கள நகர்வுகள் தீவிரமடைந்திருக்கின்றன. புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் தொடர்பில் ராஜபக்ஷக்களின் அரசாங்கம் கரிசனை கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முற்றிலும் இல்லாமலாக்குவதற்கான காய்களை மொறகொட நிச்சயம் மேற்கொள்வார்.

தமிழர்களும் சிங்களவர்களும் தேவையில்லை என்று கூறும் விடயத்தில் எதற்காக இந்தியா கரிசனை கொள்ள வேண்டும் - என்னும் தர்க்கத்தை மொறகொட, நாசூக்காக புதுடில்லி கொள்கை வகுப்பாளர்களின் காதுகளில் போட முயற்சிக்கலாம். இனியும் தமிழ் தலைவர்கள் என்போர் கற்பனைகளில் மயங்கிக் கிடந்தால் அனைத்தும் சர்வ நாசமாகலாம். தமிழ் தலைவர்கள் என்போர் - உடனடியாகவே விழித்துக் கொண்டு, செயலாற்ற வேண்டும்.



# இலங்கை - இந்திய இராஜதந்திர உறவு!

**- அலசுவது இராஜதந்திரி -**

*இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே வரலாற்று ரீதியான உறவு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாயந்ததாக இருக்கின்றது. ஆனால், இராஜதந்திர ரீதியான தொடர்புகள் கடந்த நாற்பது வருட காலத்தில் இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையே ஏற்றத்தாழ்வுகளைக் கண்டதாகவே இருக்கின்றது.*

*இலங்கையும் இந்தியாவும் அணிசேரா இயக்கத்தின் ஸ்தாபக நாடுகளாக இருப்பதோடு, வாணிப தொடர்புகளைக்கூட இரு நாடுகளும் பன்னெடுங்காலமாக கொண்டுள்ளன. ஆனால், இலங்கையின் வடக்கு - கிழக்கின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான காலத்திலிருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவில் பல கசப்பான அனுபவங்களும் ஏற்பட்டிருந்ததோடு இலங்கை பெரிதும் உள்ளூர் அரசியல் விவகாரங்களிலேயே கவனத்தை செலுத்திவந்த நிலையில் பிராந்திய மற்றும் சர்வதேச அரசியலுக்குள்ளேயும் பிரவேசிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருந்தது.*

*பிராந்திய மற்றும் சர்வதேச அரசியலைப் பொறுத்தவரை ஆசியப் பிராந்தியத்தில் குறிப்பாக தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியா பூகோள ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கேந்திர முக்கியத்துவம் மிக்கதாகவே இருக்கின்றது.*

**இதிகாச கால இராஜதந்திரம்**

*இந்தியாவின் அரசியல் ரீதியான இராஜதந்திர அணுகுமுறைகளை எடுத்து நோக்கும் பட்சத்தில் முழு உலகுக்குமே அரசியல் மற்றும் இராஜதந்திர அணுகுமுறைகளைப் புகட்டுமளவிற்கு இந்தியாவின் பழம்பெரும் இதிகாசங்களான மகாபாரதமும், இராமாயணமும் விளங்குகின்றன.*

*இராமாயணம் மற்றும் மகாபாரதத்தில் காணப்படுகின்ற அரசியல் நகர்வுகள் இராஜதந்திர சூட்சுமங்கள் என்பவை மூக்கில் விரலை வைக்குமளவுக்குக் காணப்படுகின்றன. மகாபாரதத்தில் கடவுளான கிருஷ்ண பரமாத்மாவே பலதரப்பட்ட இராஜதந்திர அணுகுமுறைகளில் ஈடுபட்டு பின்னர் அவரே முன்னின்று மகாபாரதப் போரை நடத்தியமையையும் அவதானிக்க முடிகின்றது.*

*அத்துடன், யுத்த களமான குருஷேத்திரத்தில் அர்ஜூனனின் தேர் சாரதியாக இருந்து அவனுக்கு கிருஷ்ண பகவான் போதித்த பகவத் கீதை, மானிட வாழ்வின் பல்வேறு தன்மைகள் அவற்றுக்கு முகங்கொடுக்கும் மனப்பக்குவம் என்பவற்றை மானிட குலத்துக்கு போதிப்பதாகவே அமைந்திருந்தது.*

*இதனை மகாத்மா காந்தியடிகள்கூட ஒருதடவை இப்படிக் கூறியிருந்தார். சிறை வைக்கப்பட்டிருந்த தருணங்களில் எல்லாம் தமக்கு மனத்தெம்பைதந்து உற்சாகமளித்தது பகவத் கீதையே எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, பிரித்தானிய சாம்ராச்சியத்துக்கு எதிராக முழு உலகுமே வியந்து போற்றிய சாத்வீகப் போராட்டத்தை நடத்திய மகாத்மா காந்தியடிகளுக்கு அரசியல் ரீதியாக சவால்கள் ஏற்பட்ட போது கைகொடுத்தது பகவத் கீதையே என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்நிலையில் சர்வதேச சமூகத்தில் இராஜதந்திர நடவடிக்கைகளை கையாளுவதில் தனக்கென ஒரு தனித்துவமான பண்பை கொண்டுள்ள இந்தியா மிக உன்னதமான இராஜதந்திரிகளோடு உலகில் மிகவும் உயர்வான இராஜதந்திர சேவையை கொண்டதாகவும் இருக்கின்றது.*

*இலங்கையைப் பொறுத்தவரை இந்தியாவின் இராஜதந்திர அணுகுமுறைகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்கதாகவே இருந்தது. ஆயினும், "வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது" போல அதன் அரசியல் இராஜதந்திர அணுகுமுறைகளைப் புறந்தள்ளி இறுதியில் இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை வடக்கு - கிழக்கில் அமுலாக்குவதற்கு இந்தியாவிடம் மண்டியிட்டு நிற்கும் நிலைக்கு இலங்கையின் வடக்கு - கிழக்கு அரசியலாளர்கள் தள்ளப்பட்டுள்ள பரிதாபகரமான நிலையையும் தற்போது அவதானிக்க முடிகின்றது.*

**பிராந்திய அரசியல் கெடுபிடி**

*இதேவேளை, வடக்கு - கிழக்கு யுத்தத்தின் முடிவையடுத்து இலங்கை ஒரு பிராந்திய ரீதியான அரசியல் கெடுபிடிக்கு உள்ளாகியுள்ளது.*


*சீனாவை யுத்தத்துக்குப் பின்னரான பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு இலங்கை பெரிதும் நம்பியுள்ளது. இலங்கை சீனாவை நாடுவதற்கு கடந்த நாற்பது வருட தசாப்தத்தில் சீனா தனது திறந்த பொருளாதார கொள்கையில் அபரிமிதமாக வளர்ச்சி கண்டுள்ளது. இந்த வளர்ச்சி இந்தியாவை மட்டுமல்ல. முழு உலகையுமே வியப்புக்குள்ளாக்கியுள்ள நிலையில், இலங்கையில் சீனாவின் பிரசன்னம் இந்தியாவை இலங்கைமீது பிராந்திய அரசியலைப் பொறுத்தவரை சீன உறவு குறித்து சந்தேகம் கொள்ள வைத்துள்ளதையே அறிய முடிகின்றது.*

*இத்தகைய பின்னணியிலேயே இந்தியாவுக்கான புதிய தூதுவராக மிலிந்த மொறகொடவை, இரு நாடுகளுக்கும் இடையே தோன்றக்கூடிய இராஜதந்திர ரீதியான பிணக்குகளை கையாள இலங்கை புதுடில்லிக்கு அனுப்பி வைக்கின்றது.*

*சீனாவின் கொழும்பு துறைமுகநகர அபிவிருத்தித் திட்டம் மற்றும் பிராந்திய ரீதியாக சீனாவின் அரசியல் பொருளாதார நடவடிக்கைகள் தனக்கு ஒரு தலையிடியாக இருக்கக் கூடாதென இந்தியா கருதுகின்றது.*

*இதுவிடயத்தில் இந்தியாவின் மிகப்பலம் பொருந்திய இராஜதந்திர சமூகத்துக்கு முன்பாக இந்தியாவுக்கான புதிய இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொடவால் எவ்வளவு தூரம் தாக்குப்பிடிக்க முடியுமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஓகஸ்ட் - 03 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஆடி 18

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 3.00 - 4.30 |
| திதி | : | அதிதி |




03.08.2021

**மேடம்**
சக ஊழியர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். அதிர்ஷ்டம் தரும் நாள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார். சிலருக்கு ஆன்மிக நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பு வரும்.

**இடபம்**
எதிர்பார்த்ததை விட நல்ல செய்தி உங்கள் வீடு தேடி வரும். வெளியூர்ப் பயணத்தால் ஆதாயம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த விஷயம் ஒன்று வெற்றிகரமாக முடியும். மகிழ்ச்சியான திருப்பங்கள் ஏற்படும். நீண்டநாள் கவலை தீரும். அக்கம்பக்கத்தினருடன் அனுசரித்துப் பயனடைவீர்கள்.

**கடகம்**
உறவினர்கள் கோபமாகப் பேசலாம். சற்று பொறுமையுடன் கேளுங்கள். எதிர்பார்த்த நல்ல செய்தி ஒன்று வருவதற்குத் தாமதமாகும். பொறுமையை இழக்காமல் பேசினால் வெற்றி உங்களுக்கே.

**சிம்மம்**
செய்யும் எந்தச் செயலிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிரியமானவர்களிடம் இதமுடன் நடந்து கொள்வீர்கள். சேமிப்புக் கூடும். மற்றவர்களால் பிரச்னை ஏற்படலாம். பொறுமை காப்பது அவசியம்.

**கன்னி**
உங்கள் செயல்பாடு கண்டு பெற்றோர் பெருமிதம் கொள்வர். பொறுப்பும், வேலையும் அதிகரித்தாலும் சமாளித்து வெல்வீரகள். பணிச்சுமை அதிகரிக்கும். சற்று பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்**
மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சகோதரரின் ஆதரவு உண்டு. தந்தையுடன் வீண் வாக்குவாதம் செய்வதை தவிர்க்கவும். வருமானம் வரும். நண்பர்களிடம் கவனமாக இருக்கவும்.

**விருட்சிகம்**
உங்களை விட வயதில் குறைந்தவர்களால் பிரச்னை ஏற்படலாம். புதிய வீடு வாங்குவீர்கள். வாழ்வுக்கு வழிகாட்டியாக ஒரு நண்பர் கிடைப்பார். உற்சாகம் தரக்கூடிய தகவல் வரும். திட்டமிட்டுச் செயல்படுவீர்கள்.

**தனுசு**
விழிப்புணர்வு தேவை. தேவையற்ற எண்ணங்களால் குழப்பமடைவீர்கள். மற்றவர் விஷயத்தில் தலையிட வேண்டாம். மறதியால் தொல்லை ஏற்படலாம். பிள்ளைகளுக்காக செலவழிப்பீர்கள்.

**மகரம்**
பொருட்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் உஷார். பொறுமை பலனளிக்கும். குடும்பத்தில் கலகலப்பு உண்டாகும். தாமதித்த விஷயம் ஒன்று தானாக நடைபெறும். நண்பர்கள் உதவுவர்.

**கும்பம்**
கடந்த கால பிரச்னையில் இருந்து விடுபட்டு நிம்மதியடைவீர்கள். மனதில் புத்துணர்ச்சி பெருகும். மற்றவர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். குடும்பத்தில் நல்ல செய்தி வரும். உற்சாகம் நிலவும்.


**மீனம்**
கணவர் அல்லது மனைவியால் குடும்ப ஒற்றுமை பலப்படும். செலவுகள் அதிகரித்தாலும் குடும்பத்தில் சநதோஷம் குறையாது. நீண்ட காலத்திட்டம் ஒன்று நிறைவேறும். மனதில் மகிழ்ச்சி மேலோங்கும்.

# இலங்கை தமிழ் அகதிகளுக்கு குடியுரிமை வழங்க மறுப்பதா?

## மத்திய அரசுக்கு சீமான் கண்டனம்

சென்னை, ஒக. 03

ஈழச்சொந்தங்களை சட்ட விரோதமாக குடியேறியவர்கள் என கூறி, அவர்களுக்கு குடியுரிமை வழங்க மறுக்கும் மத்திய அரசு தனது முடிவை உடனடியாக திரும்பப்பெற வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தி உள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையை ஆளும் சிங்கள பேரினவாத அரசின் கோர இன அழிப்புக்கு ஆளாகி, ஒரு பாரிய இனப்படுகொலையை எதிர்கொண்டு, அளவில்லா அழிவுகளுக்கும், இழப்புகளுக்கும் முகங்கொடுத்து நிர்க்கதியான நிலையில் ஈழச்சொந்தங்கள் நிற்கிறார்கள். அவர்கள் இந்த பூமிப்பந்தில் உயிர்வாழ்வதற்கு ஓர் இடம் கிடைக்காதா என ஏக்கத்தோடும், தவிப்போடும் 10 கோடி தமிழ் மக்களின் தாயகமாக விளங்கும் தாய் தமிழகத்தை நாடி வருகையில், அவர்களை சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என கூறி மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு அவமதித்திருப்பது ஒட்டுமொத்த தமிழர்களையும் பெரும் கோபத்துக்கு ஆளாக்கியிருக்கிறது.

இந்திய நாடு நாடாவதற்கு முன்பிருந்தே இந்த நிலத்தை ஆண்ட பேரினத்தின் மக்களை ஆரியக்கூட்டம் ஆதிக்கம் செய்ய முற்படுவது வரலாற்றுப் பெருங் கொடுமையாகும். ஆகவே, ஈழச் சொந்தங்களை சட்ட விரோதமாக குடியேறியவர்கள் என கூறி, அவர்களுக்கு குடியுரிமை வழங்க மறுக்கும் மத்திய அரசு தனது முடிவை உடனடியாக திரும்பப்பெற வேண்டும். மேலும் தமிழகத்தை ஆளும் தி.மு.க. அரசு தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளவாறு ஈழத்தமி ழர்களுக்கு குடியுரிமை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க சட்டப்போராட்டமும், மத்திய அரசுக்கு அரசியல் நெருக்கடியும் கொடுக்கவேண்டும்" என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# கமல்ஹாசனுக்கு வரவேற்பு அளித்ததில் கொரோனாகால நடைமுறைகள் மீறல்!

## மக்கள் நீதி மய்யம் நிர்வாகிகள் மீது வழக்கு

கோவை, ஒக. 03

கோவையில் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசனை வரவேற்ற அக்கட்சி நிர்வாகிகள் மீது பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். கொரோனா கால நடைமுறைகளை மீறிச் செயற்பட்டனரென அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.




தமிழக சட்டசபை தேர்தலில் கோவை தெற்கு சட்டசபை தொகுதியில் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இந்நிலையில் தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், கட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகவும் நிகழ்ச்சிகள்திட்டமிடப்பட்டது. அதன்படி, கமல்ஹாசன் சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் கோவை வந்துள்ளார். அவருக்கு விமான நிலையத்தில் கட்சி தொண்டர்களும், ரசிகர்களும் உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்நிலையில், நேற்று காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் சமீரனை சந்தித்து கிராமசபை கூட்டம் மற்றும் பொது மக்களின் பிரச்சினைகள் குறித்து மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் மனு கொடுத்துள்ளார்.

இந்நிலையில், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசனை வரவேற்ற அக்கட்சி நிர்வாகிகள் மீது கோவை பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். விதிகளை மீறுதல், அனுமதியின்றி ஓரிடத்தில் ஒன்று கூடுதல், சமூக இடைவெளியை கடைப் பிடிக்காதது உள்ளிட்ட பிரிவு களின் கீழ், மாநில துணை தலைவர் தங்கவேல், மாநில நிர்வாகிகள் அனுஷ ரவி, மயில்சாமி, ரங்கநாதன், ரத்தினம் ஆகியோர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது.

# சென்னை வந்தார் ஜனாதிபதி ராம்நாத்! 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு

சென்னை, ஒக. 03

தமிழ்நாடு சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழா மற்றும் கலைஞரின் படத்திறப்பு விழா ஆகியவற்றில் கலந்துகொள்ள இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நேற்று சென்னை வந்தடைந்தார். சென்னை விமான நிலையத்தில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை ஆளுநர் பன்வாரிலால் புரோகித், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துரைமுருகன், ஆ.ராசா உள்ளிட்டோர் வரவேற்றனர்.



அவரது வருகையையொட்டி சென்னையில் 5 அடுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தலைமைச் செயலகம் விழாக் கோலம் பூண்டுள்ளது. சென்னை வந்ததும் ஆளுநர் மாளிகையில் தங்கி ஓய்வெடுத்தார். மாலை 5 மணிக்கு சட்டமன்றத்தில் விழா ஆரம்பமாகியது. விழா வில் கலந்துகொள்ள எம்.எல்.ஏ.க்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தலைமைச் செயலகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நுழைவு வாயிலில் வாழை மர தோரணம், வண்ண வண்ண பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டு உள்ளது.

# தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகள் நிறைவேற்றப்படுவதே இலங்கைக்கு நன்மை!

## இந்திய இராஜாங்க அமைச்சர் எடுத்துரைப்பு



புதுடில்லி, ஓக.03

**இலங்கைத் தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள் நிறைவேற்றப்படுவதே இலங்கைக்கு நன்மையாக அமையும் என்று இந்தியா நம்புகிறது என இந்தியாவின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வீ. முரளிதரன் தெரிவித்துள்ளார்.**

இந்திய ராஜ்யசபாவில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போது அவர் இதனைக் கூறியுள்ளார். சமத்துவம், நீதி, அமைதி மற்றும் கௌரவம் என்பன தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதி யாக உள்ளது.

தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் ஊடாக, தமிழ் மக்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படுவது, இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு பங்களிப்பு செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

# ஜனாசாக்களை அடக்கம் செய்யும் ஓட்டமாவடியில் கடும் இடநெருக்கடி

கொழும்பு, ஓக. 03

கொரோனா மரணங்கள் அதிகரிக்கும் நிலையில், ஜனாசாக்களை அடக்கம் செய்யும் ஓட்டமாவடி, மஜ்மா நகர் பகுதியில்இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.


இதனால், கொரோனா மரண ஜனாசாக்களை மாற்று இடமொன்றில் அடக்கம் செய்வதற்கான அனுமதி அவசரமாக கோரப்பட்டிருந்தது.

கொரோனா ஜனாசா அடக்கம் செய்யும் பகுதியை சாப்பமடு எனும் பகுதிக்கு மாற்றுவதற்கு பரிந்துரைக்குமாறு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்து, தற்போது ஓட்டமாவடிக்கு பகுதிக்கு பதிலாக பிறிதொரு இடத்தில் ஜனாசா அடக்கம் செய்வது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் ஆலோசித்து வருகின்றனர்.

ஓட்டமாவடி மையவாடியில் கடந்த 28ஆம் திகதி வரை 1,170 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன அறியமுடிகிறது.

# லண்டன், அமெரிக்காவுக்கு செல்லவுள்ளார் ஜனாதிபதி



கொழும்பு, ஓக. 03

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செப்ரெம்பரில் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யத் திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவரது சுற்றுப்பயணத்தின் போது அடுத்த மாதம் லண்டனில் நடைபெறும் சுற்றுச்சூழல் உச்சிமாநாட்டில்கலந்துகொள்ள உள்ளார்.

இலங்கையில் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் ஜனாதிபதியின் நடவடிக்கைகளை சுற்றுச்சூழல் உச்சிமாநாட்டு அமைப்பாளர்கள் பாராட்டியுள்ளனர். உச்சிமாநாட்டில் பங்கேற்று உரையாற்றுமாறு அவர்கள் ஜனாதிபதிக்கு அழைப்புக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து வாஷிங்டனில் நடைபெற வுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் ஜனாதிபதி திட்ட மிட்டுள்ளார். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தொடரில் அவர் பங்கேற்கும் முதல் சந்தர்ப் பமாக இது அமையவுள்ளது.

இதேவேளை, இந்த வெளிநாட்டுப் பயணத்தின்போது தனது பேரக் குழந்தையை முதன் முறையாகப் பார்க்கவும் ஜனாதிபதி ஆர்வமாக உள்ளதாகத் தெரியவருகிறது.

# தடுப்பூசி பெறாதோர் குறித்து கணக்கெடுப்பு மேற்கொள்க!

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஓக. 03

இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில், தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனா நோயாளர்கள் மற்றும் மரணமடைந்தவர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு ஏற்ப அவர்களில் சுமார் 95 சதவீதமானவர்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், தடுப்பூசி ஏற்றுதல் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து கொரோனா ஒழிப்பு விசேட குழுவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே, ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

தடுப்பூசிகள் விநியோகிக்கப்பட்டிருந்தபோதும் அவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்து விசாரணை செய்வதும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்கவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து, பிரதேச செயலக மட்டத்தில் துரித கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொண்டு, சில தினங்களுக்குள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் குறித்த அறிக்கை ஒன்றைப் பெற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது என்றும் நோய் பரவுவதை தடுக்கும் வகையில் செயற்படுவதும் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக்கொள்வதும் மக்களின் கடமையாகுமென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில்அரச நிறுவனங்கள்மற்றும்பொது இடங்களுக்கு வருகை தரும் மக்கள், தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் என்பதனை உறுதிப்படுத்தும் அட்டையைத் தம்வசம் வைத்திருப்பதை கட்டாயமாக்குவது குறித்தும் கொரோனா குழு கவனம் செலுத்தியுள்ளது.

# சபாநாயகர் நேரில் ஆய்வு

கொழும்பு, ஓக. 03

ஒரு கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் டிஜிலி கால்வாயின் புனரமைப்பு பணிகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேரில் ஆய்வு செய்தார்.

மாத்தறை மாவட்டத்தில் உள்ள டிஜிலி கால்வாய் புனரமைப்பு இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. சுமார் 70 ஆண்டுகளுக்கு பிறகு குறித்த கால்வாய் சீரமைக்கப்பட்டு வருகிறது.

டிஜிலி கால்வாய் விரிவாக்கத் திட்டத்தின் காரணமாக இப்பகுதியில் வெள்ள நிலைமையைக் குறைக்க முடிந்ததற்கு சபாநாயகருக்கு டிகிலிய கால்வாயை சுற்றியுள்ள கிராம மக்கள் நன்றி தெரிவித்தனர்.

இதன்போது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

# வாக்களித்த மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர்

## அனுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, ஓக. 03

நாட்டின் முன்னேற்றத்திற்கான எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்கள் தற்போது தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்துள்ளதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாக நாடு பின்பற்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கொள்கைகளின் முடிவுகளை நாடும் மக்களும் அனுபவித்து வருவதாக அந்தக் கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் எதிர்காலம் இல்லை என்பதை அனைத்து துறைகளும் காட்டுகின்றன என்றும் கடன் காரணமாக பொருளாதாரம் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடன் தவணைகளை திருப்பிச் செலுத்த வெளிநாட்டு இருப்புக்கள் போதுமானதாக இல்லை, இதன் விளைவாக அரசாங்கம் அதிகபடியான பணத்தை அச்சிடத் தொடங்கியது என்றும் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க பொருளாதார தந்திரோபாயம் இல்லை என்பதை அரசாங்கம் காட்டுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அண்மைய அரசியலில் இரு துரோகங்களை எதிர்கொண்டுள்ளார்கள் நாட்டு மக்கள்!

## ஹரிணி அமரசூரிய கூறுகிறார்

கொழும்பு, ஓக. 03

சமீபத்திய அரசியல் வரலாற்றில் பொதுமக்கள் இரு பெரும் துரோகங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர ஒன்றிணைந்த மக்கள், அந்த ஆட்சியால் அதிருப்தி அடைந்தனர்.

பின்னர் தேசிய பாதுகாப்பு மற்றும் இறையாண்மை பற்றிய



வாக்குறுதிகளின் அடிப்படையில் 2019 இல் மக்கள் மீண்டும் நம்பிக்கையை இழந்துள்ளனர்.

துரோகங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது பல்வேறு வழிகளில் தீர்வுகளைத் தேடுகிறார்கள்.

இருப்பினும், அதே தரப்பினர் தற்போதும் மக்களை மீண்டும் ஏமாற்றவும் காட்டிக் கொடுக்கவும் புதிய தோற்றத்துடன் வெளியே வரத் தயாராகி வருகின்றன.

எனவே, மக்கள் மீண்டும் ஏமாறாமல் தடுப்பதற்கு அனைத்து முற்போக்கு சிந்தனையுடைய அனைவரையும் ஒன்றிணைய வேண்டும்-என்றார்.

# திருமண வைபவங்களை சிலர் தவறாக பயன்படுத்துகின்றனர்

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக.03**

**திருமண வைபவங்களை நடத்துவதற்காக வழங்கப்பட்ட தளர்வு விதிமுறைகளை சிலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.**

தற்போதைய வழிகாட்டுதல்களின்படி 150 பேர் வரை திருமணங்களில் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமண வைபவங்களில் கலந்துகொள்வர்களுக்கு மத்தியில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில் எதிர்காலத்தில் இந்த விவகாரம் குறித்து ஒரு முடிவு எடுக்கப்படவேண்டும் என அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அதன்படி கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்கள் அல்லது பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்களை திருமண நிகழ்வுகளில் அனுமதிப்பது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் திருமணத்துக்கு வருபவர்கள் மற்றும் திருமண வைபவங்களை நடத்துபவர்கள் இந்த சூழ்நிலையில் பொறுப்புடன் செயல்படவேண்டும் என்றும் உபுல் ரோஹண கேட்டுக்கொண்டார். கொரோனா தொற்று நிலைமை மோசமடைந்தால் திருமண நிகழ்வுகளை மட்டுப்படுத்த அல்லது கட்டுப்படுத்தவேண்டி ஏற்படும் என்பதால் சுகாதார வழிகாட்டுதல்களை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் கோரினார்.

# மெத்தையின் கீழ் 30 பாம்புக்குட்டிகள்



கொழும்பு, ஒக. 03

மாவத்தகம தெல்கொல்லவத்தை பகுதியில் உள்ள ஒரு வீட்டின் படுக்கையறை மெத்தையின் கீழ் 30 பாம்புக் குட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

குருநாகல் மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் சுற்றுச் சூழல் ஆர்வலர் கெலும் சோமரத்ன அந்த வீட்டுக்குச் சென்று 30 பாம்புக் குட்டிகளை மீட்டார்.

வீட்டு உரிமையாளரின் மனைவி மற்றும் குழந்தைகள் படுக்கும் மெத்தையின் கீழ், பல நாட்களாக 30 பாம்புக் குட்டிகள் இருந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டில் இரண்டு குட்டிப் பாம்புகள் காணப்பட்டன. வீட்டின் உரிமையாளர் அவற்றைக் கொன்றார்.

பின்னர் இரவில், கொசு வலையிலிருந்து மற்றொரு பாம்புக் குட்டி படுக்கைக்குள் நுழைந்து, தூங்கிக் கொண்டிருந்த ஒருவரின் உடலில் ஊர்ந்து சென்றது.

அவர்கள் இதை சுற்றுச்சூழல் ஆர்வலர் கெலுமுக்கு தெரிவித்த பிறகு, அவர் வந்து வீட்டை ஆய்வு செய்து, படுக்கை மெத்தையின் கீழ் இருந்த பாம்புக் குட்டிகளை பத்திரமாக வெளியேற்றினார்.

வீட்டை ஆய்வு செய்தபோதிலும், பாம்பு குட்டிகள் பொரித்த முட்டையின் துகள்கள் எதுவும் தென்படவில்லை. வீட்டின் இன்னொரு பகுதியிலிருந்து தாய்ப் பாம்பென நம்பும் ஒரு பாம்பும் கண்டறிப்பட்டு, பாதுகாப்பாக மீட்கப்பட்டன.

# சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகம் நாட்டுக்கு அவசியம்

## கூறுகிறார் கல்வி அமைச்சர்



கொழும்பு, ஒக. 03

தற்போதைய சூழ்நிலையில் சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகம் நாட்டுக்கு அவசியம் என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற நிகழ்ச்சில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது மனிதாபிமானமற்ற முறையில் அவர்களை நடத்துவது துஷ்பிரயோகம் மற்றும் கற்பழிப்பு போன்ற சமீபத்தைய நிகழ்வுகள் அதற்கான அவசியத்தை எடுத்துக் காட்டுவதாக தெரிவித்தார்.

எனவே சிறந்த கட்டமைப்பு கொண்ட சமூகம் இந்த கால கட்டத்தில் தேவை என்றும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்தினர்.

இதேவேளை, அரசாங்கம் இது தொடர்பாக பல முடிவுகளை எட்டியுள்ளது, அதே நேரத்தில் பல சட்டங்கள் பாராளுமன்றத்தில் அறிமுகப் படுத்தப்பட்டு நிறைவேற்றப் பட்டன என்றும் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

# வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் காவலாளி உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஒக. 03

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் காவலாளியான இராதாகிருஷ்ணன் சிவகுமார் என்பவர் பிரதேச சபையின் முன்னால் சவப்பெட்டியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்-

நிரந்தர ஊழியரான என்னை, கடந்த 2015ஆம் ஆண்டு பணி இடைநீக்கம் செய்தனர். 15 மாதங்களின் பின்னர் விசாரணைகள் எதுவுமின்றி எனக்கு மீண்டும் வேலை தந்தனர்.

அதன் பின்னர் நான் மது போதையில் கடமையில் இருந்ததாகக் கூறி கடந்த 2018 ஆம் ஆண்டு என்னை வேலையில் இருந்து பணிநீக்கம் செய்தனர்.

இதுதொடர்பாக நான் பிரதேச சபையுடன் முரண்பட்ட போது வட்டுக்கோட்டை பொலிஸார் என்னை அழைத்துச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். அதன் பின்னர் பொலிஸார் என்னை நீதிமன்றத்தை நாடுமாறு கூறினர்.

நான் நீதிமன்றத்தை நாடிய போதும் பிரதேச சபை நீதிமன்றத்துக்கு சரியான முறையில் சமுகமளிப்பதில்லை.

இதனால் நான், பிரதேச சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் அல்லது சட்டத்தரணிகள் அல்லது சமாதான நீதவான் முன்னிலையில் எனது பிரச்னைகளை விசாரணை செய்யுமாறு கூறினேன். ஆனால், பிரதேச சபை அந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

2018 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மூன்று வருடங்கள் நான் விசாரணைகள் எதுவுமில்லாமல் வேலையும் இல்லாத நிலையில் இருக்கின்றேன்.

இந்த நிலையில் மன விரக்தி அடைந்த நான், எனக்கான நீதியை வேண்டி, பிரதேச சபையின் முன்னால் சவப்பெட்டியுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன்- என்றார்.

# வடக்கில் ஞாயிறு 181 பேருக்கு கொரோனா தொற்று உறுதி!

யாழ்ப்பாணம், ஒக. 03

வட மாகாணத்தில் நேற்று முன்தினம் மொத்தம் 181 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக கோவிட் 19 பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 65, முல்லைத்தீவு - 48, வவுனியா - 32, கிளிநொச்சி - 24 மற்றும் மன்னாரில் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுடன் யாழ்ப்பாணத்தில் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 7,782 - ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கிளிநொச்சியில் - 1,854, முல்லைத்தீவில் - 1,486, வவுனியாவில் - 1,808 மற்றும் மன்னாரில் 1,401 பேருக்கு இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# கிழக்கில் 109 பேருக்கு கொரோனா தொற்று

மட்டக்களப்பு, ஒக. 03

கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் மொத்தம் 109 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக கோவிட்19பரவலை தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையத்தினால் நேற்று காலை வெளியிடப்பட்ட நாளாந்த நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் - 38, திருகோணமலையில் - 38 மற்றும் அம்பாறையில் -33 பேருக்கு நேற்று முன் தினம் தொற்று உறுதி செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுடன், மட்டக்களப்பில் மொத்தமாக 6,145 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. அத்துடன், திருகோணமலையில் 3,728 மற்றும் அம்பாறையில் 6,257 பேருக்கும் இதுவரை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் 70 சிறார்களுக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஒக. 03

கொழும்பு சிறுவர் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் சிறுவர் கொரோனா நோயாளர் களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எனவே, பொதுமக்கள் கொரோனா வைரஸ் பரவலின் ஆபத்து அறிந்து முறையான சுகாதார வழிமுறைகளுக்கு அமைவாக செயற்படுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

# தடுப்பூசி ஏற்றிய பின்னர் நாட்டை திறப்பதே சிறந்தது

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கருத்து



**கொழும்பு, ஒக.03**
**சுகாதார அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையிலேயே நாட்டை முழுமையாக திறப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்படும் நேரத்தில் படிப்படியாக நாட்டைத் திறப்பதே சிறந்த தீர்வு என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையில் மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்துக்கு வழங்கப்பட்ட அனுமதி குறித்து கண்டியில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அவர், நாட்டை முழுமையாக திறப்பதற்கு எடுக்கப்பட்ட முடிவுகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டவை அல்ல என குறிப்பிட்டார்.

மேலும் தடுப்பூசித் திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் நேரத்தில் படிப்படியாக நாட்டைத் திறப்பதே சிறந்த தீர்வு என்றும் அமைச்சர் நாமல் தெரிவித்தார்.

இதேவேளை, ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பிரச்னைகளை தீர்ப்பதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் நாமல் குறிப்பிட்டார்.

# அதிபர்,ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் ஆர்ப்பாட்டம்

மன்னார், ஒக. 03

மன்னாரில் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நேற்று திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் வலயக்கல்வி பணிமனைக்கு முன் குறித்த ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது.

இதன்போது 24 வருட ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு உடனடியாக தீர்வினை வழங்க கோரியும், ஆசிரியர், மாணவர், பெற்றோர்களை துன் புறுத்துகின்ற கல்வி நெருக்கடிக்கு உடனடியாக தீர்வை வழங்கக் கோரியும், இலவசக் கல்வியை இராணுவ மயமாக்கும் கொத்தலாவல சட்டமூலத்தை உடனடியாக இரத்து செய்யக் கோரியும் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் மன்னார் வலயக்கல்வி பணிமனைக்கு முன் ஆரம்பமாகி மன்னார் பஜார் வீதியூடாக சென்று மன்னார் மாவட்ட செயலக வீதியை சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் நகர சபை வீதியூடாக மீண்டும் மன்னார் வலயக்கல்வி பணிமனை வீதியை அடைந்தது.

குறித்த போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் செயல்பட்டுவரும் வெளிநாட்டு உளவு அமைப்புகள்

கொழும்பு, ஒக. 03

பல நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் இலங்கையில் செயல்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. இலங்கையில் ஈடுபாடுள்ள நாடுகள் தொடர்பான தகவல்களை பெறவும், எதிர்ப்பிரசார நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிக்கவும் அந்த அமைப்புக்கள் செயல்படுவதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக்குள் சில நாடுகளின் செயல்பாடுகள், அவர்கள் உள்நாட்டில் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகள் மற்றும் அவர்களின் இராணுவ இருப்பு ஆகியவற்றைக் கூர்ந்து கவனிப்பதே இந்த புலனாய்வு அமைப்புகளின் முக்கிய கவனமாகும்.

இந்தியப் பெருங்கடலில் இலங்கை ஒரு மூலோபாய இடமாக பார்க்கப்படுகிறது. பிராந்திய ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாக சில நாடுகளால் இலங்கை பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் சர்வதேச மற்றும் பிராந்திய வல்லரசுகளிடையே ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரிகள் இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்தி இலங்கைக்குள் நுழைந்ததாக நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடனான போர் உச்சத்தில் இருந்தபோது வெளிநாட்டு உளவுத்துறை அதிகாரிகள் இலங்கையில் செயல்பட்டதாக நம்பப்படுகிறது.

போரின்போது, அரச உயர்மட்ட கூட்டங்களை அவர்கள் பதிவு செய்யலாமென்ற அச்சம் ஏற்பட்டதாகவும், அந்த நேரத்தில் இருக்கும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மூடிய கதவு சந்திப்புகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் பாதுகாப்பு தரப்புக்களால் தடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஊடக அமைச்சரும் அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளருமான கெஹெலிய ரம்புக்வெல இது தொடர்பில் கருத்து தெரிவித்தபோது,

வெளிநாட்டு புலனாய்வு அதிகாரிகளை, குறிப்பாக இராஜதந்திர கடவுச்சீட்டை பயன்படுத்தி நாட்டில் இருக்கும் போது அவர்களைக் கண்டறிவது கடினம் என்று கூறினார்.

வெளிநாடுகளின் உளவுத் துறை அதிகாரிகள் செயல்படுவதாக நம்பப்படும் ஒரே நாடு இலங்கை அல்ல என்றும் அவர் கூறினார்.

“மற்ற நாடுகளிலும் இது நடப்பதை நாங்கள் காண்கிறோம், அங்கு உளவுத்துறை சேகரிப்புக்கு வெளிநாட்டுப் பணிகள் பயன்படுத்தப்படுகின்றன” என்று ரம்புக்வெல கூறினார்.

எவ்வாறாயினும், உள்ளூர் புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கையுடன் இருப்பதாகவும், எந்தவொரு வெளிநாட்டவர் இருப்பதன் விளைவாக இலங்கைக்கு அச்சுறுத்தல் இருந்தால் உள்ளூர் அதிகாரிகள் செயல்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 10 மில்லியன் தடுப்பூசிகள் போட்ட மைல்கல்லை எட்டியது இலங்கை!

கொழும்பு, ஒக. 03

10 மில்லியனுக்கும் அதிக மானவர்களுக்கு குறைந்தது ஒரு தடுப்பூசியை போட்ட மைல் கல்லை இலங்கை எட்டியுள்ளது. அத்துடன், நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகையில் 86 வீதமானவர்கள் குறைந்தது ஒற்றைக் கோவிட் 19 தடுப்பூசிகளைப் பெற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு வரையான தடுப்பூசித் தரவுகளின் பிரகாரம் இலங்கையில் 10,076,981 பேர் குறைந்தது ஒரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். அத்துடன், இதே வயதுப் பிரிவினரில் 20 வீதம் பேர் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் திட்டம் நிறைவடைந்ததும் 19 முதல் 30 வயது வரையானவர்களுக்கான தடுப்பூசித் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

டொலர் நெருக்கடியால்

# கொழும்பு துறைமுகத்தில் குவியும் கொள்கலன்கள்!

கொழும்பு, ஒக. 03

வர்த்தக வங்கிகளில் டொலர்கள் பெற்றுக்கொடுக்கப்படாத காரணத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய ஆயிரக்கணக்கான கொள்கலன்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக்கிடப்பதாக அறியமுடிந்தது.

இதேவேளை, ஜூலை மாதம் முதல் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உணவுப்பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் என அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியாளர் வர்த்தக சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளது.

ஜூலை மாதத்துக்கென வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அத்தியாவசியப்பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதியாளர் வர்த்தக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

வர்த்தக வங்கிகள் டொலர்களைப் பெற்றுக்கொடுக்க மறுப்பதன் விளைவாக இறக்குமதிக்குரிய பணத்தை செலுத்த முடியாதுள்ளதாக அந்தச் சங்கம் ஜனாதிபதிக்கு சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து அச்சங்கத்தின் தலைவர் ஜீ. இராஜேந்திரன் மற்றும் செயலாளர் ஜீ.எஸ். இளமைநாதன் ஆகியோர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் விளக்கமளித்துள்ளனர்.

டொலர்கள் பெற்றுக் கொடுக்கப்படாத காரணத்தினால் கொள்கலன்கள் தேங்கிக்கிடப்பதாகவும் அவற்றுக்கான பராமரிப்புச் செலவு, காலதாமதச்செலவு ஆகியவற்றையும் தமக்கு செலுத்த வேண்டியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும், இந்நிலைமையால் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் காலாவதியாகக் கூடும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# அரச ஊழியரை பணிக்கு அழைக்கும் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்க!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக. 03

அரச ஊழியர்களை மீண்டும் பணிக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ள அரசாங் கத்தின் தீர்மானத்தை மறுபரி சீலனை செய்ய வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள்சங்கம்கேட்டுள்ளது.

குறித்த தீர்மானத்தின்போது அதிகாரிகள் ஒரு முக்கியமான விடயத்தை கவனத்திற் கொள்ளாமல் விட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான அரச ஊழியர்கள் தடுப்பூசியின் முதல் டோஸை மாத்திரமே செலுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

அவ்வாறு பணிக்கு வருபவர்களின் வீட்டில் உள்ளவர்கள் தடுப்பூசி செலுத்தியுள்ளார்களா என்பது தெரியவில்லை எனவே எதிர்காலத்தில் நிலைமை மாறலாம் எனவும் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.





அ.நிக்ஸலன்

# வட்டுக்கோட்டை தீர்மானத்தில் இருந்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அணுகலாமா?

தமிழகத்தில் வதியும் ஈழத்து உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்களை முன்னிறுத்தி புதிய ஒரு மெட்டில் ஓர் அரசியல் நகர்வு இணையவழிச் சந்திப்பில் உருவாகிறது. இதை வரவேற்கலாமா இல்லையா என்ற திண்டாட்டத்தில் ஈழத்துத் தமிழ்த் தேசிய அரசியல்கட்சிகளின் தலைவர்கள் சிலர் மூழ்கியிருக்கிறார்கள். இந்த "இரண்டாம் வட்டுக்கோட்டைத் தீர்மான மாநாட்டின்" உள்ளடக்கம் என்ன வடிவம் எடுக்கக்கூடிய ஆபத்து உள்ளது என்பதை முற்கூட்டியே ஈழத்தமிழர் சமூகம் ஆராய வேண்டும். "வட்டுக்கோட்டை நமஹ, இந்தோ-லங்கா ஒப்பந்த நமஹ, பதின்மூன்று நமஹ" என்று பயணிக்கவும் "சுயநிர்ணயம்" பேசலாம் என்ற மூடுமந்திரமாக அது இருக்கும் வாய்ப்பு உள்ளதா என்பதே ஆய்வுக்குரிய கேள்வியாகிறது.

இரண்டாவது வட்டுக்கோட்டை முதலாவது வட்டுக்கோட்டையின் சுயநிர்ணய உரிமை விடயத்தை மட்டும் வலியுறுத்தப்போவதாக சில ஆவணங்கள் கோடி காட்டுகின்றன.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் கவிதை மற்றும் கடந்த கால போராட்ட வரலாறு ஈழத் தமிழர்களால் மட்டுமல்ல உலகளாவிய தமிழர்களால் போற்றப்படும் ஒன்றாகும். ஆயினும், அவர் தனது முதிய வயதில் தற்போது வட இந்தியா நோக்கிய சில உச்சாடனங்களைப் பதிய ஆரம்பித்திருப்பதையிட்டு உள்ளகமாக பலர் அண்மைய வருடங்களில் கவலை வெளியிட்டிருந்தனர். இந்த மரபில் நின்றும் வேறுபட்டு, வேறு நோக்குச் சார்ந்த சிலர் அவர் மீது காழ்ப்புணர்ச்சியோடு கட்டுரைகள் வரைந்து தூற்றியும் இருந்தனர்.

காய்தல் உவத்தல் அன்றி அவரின் தற்போதைய அரசியல் நகர்வுகள் ஆராயப்பட்டு அணுகப்படல் வேண்டும்.

வட்டுக்கோட்டை-2 என்று இணையக் கூட்டமொன்றை ஈழத்தமிழர் அரசியல் கட்சிப் பிரமுகர்களையும் இணைத்து நேற்று முன்தினம் ஞாயிறன்று, நடத்தவேண்டும் என்று காசி ஆனந்தன் பல ஈழத்தமிழர் கட்சிகளின் தலைவர்களை அண்மையில் அணுகியிருந்தார். வேறொருவர் அவரின் தொடர்பாடல்களை ஒழுங்கு செய்து கொண்டிருப்பதாகவும் மின்னஞ்சல்களைக் கையாண்டு கொண்டிருப்பதாகவும் அறியமுடிகிறது.

ஈழத்தமிழர் நட்புறவு மையம் என்ற அமைப்பின் தலைவராக கவிஞர் காசி ஆனந்தன் விளங்குகிறார். நிகழ்வை ஒருங்கிணைப்பது சென்னைப் பல்கலைக்கழக அரசியல்துறை பேராசிரியர் ராமு மணிவண்ணன். இவர் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற புலம்பெயர் செயற்பாட்டுத்தளத்தோடு தொடர்புபட்டவர் என்று தமிழக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வட்டுக்கோட்டைத் தீர்மானம் இரண்டுக்குப் பின்னால் இருப்பதான தரவுகள் எதையும் இலங் கைத் தீவில் இருந்தவாறு உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்த நகர்வில் பங்குபெறும் ஈழ விடுதலை சார்பான தமிழகப் பேச்சாளர்களின் பட்டியல் நீண்டதாக இருக்கிறது. ஆனால், அவர்கள் பலமானது போல எழுதிவைத்திருக்கும் தீர்மானம் சில அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிறது.

ஆங்கிலத்தில் கூட்டத்திற்கான இணைய அழைப்பு Lanka Vaddukoddai என்று விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், மாதிரித் தீர்மான நகலில் ஈழத் தமிழர் (Eelam Tamils) என்று எழுதப்பட்டிருக்கிறது.

1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் சுயநிர்ணய உரிமையைக் கோரிய ஒன்றாக அந்த புதிய தீர்மானத்துக்குரிய ஆங்கில நகல் சுட்ட விழைகின்றது.

அதாவது, வட்டுக்கோட்டை-1 இல் இருந்து தமிழீழத்தையும், சோஷலிஸத்தையும் கத்தரித்துவிட்டு, அதற்கு வட்டுக்கோட்டை இரண்டு என்றும், அது சார்ந்த நகர்வு இந்தியாவை நோக்கியதாகவும் வடிவமைக்கப்படுகிறது.

ஆக, "வட்டுக்கோட்டை நமஹ" என்ற உச்சாடனம் வெளிப்படுகிறது. இது "இந்தோ-லங்கா ஒப்பந்த நமஹ" என்று திரிபடைவதற்கு எத்தனை நாழிகையாகும் என்பதைப் பார்க்கலாம்.

வட்டுக்கோட்டை-2 நகல் பின்வருமாறு 1987 இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இணைத்துக்கொள்ள முயல்கிறது.

கூட்டத்திற்கான விளம்பரம் "ஈழத் தமிழர் புவிசார் அரசியலில் இந்திய அரசின் உடனடித் தலையீடு காலத்தின் கட்டாயம்" என்று முழங்குகிறது.

உணர்ச்சிகளுக்கும் முழக்கங்களுக்கும் அப்பால் நிகழ்வின் அரசியற் தார்ப்பரியம் எங்கே செல்கிறது என்பதே கேள்வி.

"நிகழ்வின் இறுதியில் தாயக அரசியல் கட்சித் தலைவர்கள் ஒப்பமிடும் தீர்மானம் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்" என்று அந்த அறிவித்தல் மேலும் விளம்புகிறது.

முதலாவது வட்டுக்கோட்டைத் தீர்மானம் தந்தை செல்வாவினால் நிறைவேற்றப்பட்டு அதற்கு மக்களாணை 1977 தேர்தலில் பரந்துபட்ட தமிழ் மற்றும் தமிழ் பேசும் மக்களால் மலையகத் தமிழர்களின் கட்சி உள்ளடங்கலாக இணைந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் தேர்தல் விஞ்ஞாபனம் ஊடாக அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தலைமையில் பெறப்பட்டது.

அதன்பின்னர் இலங்கை அரசு அவசரகாலச் சட்டம் மூலமும் ஆறாம் சட்டம் மூலமும் ஏற்படுத்திய தடைகளினால், அமிர்தலிங்கம் உள்ளிட்ட ஈழத்தமிழர்களின் அரசியற் தலைவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மறுதலிக்கும் சத்தியப்பிரமாணம் ஒன்றை மேற்கொண்டாலே பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்க முடியும் என்ற நிலையை இலங்கை ஒற்றையாட்சி அரசு 1983 ஓகஸ்டில் ஏற்படுத்தியது.

அந்தச் சத்தியப் பிரமாணத்தை மக்களாணையை மீறி மேற்கொள்ள முடியாத சூழலில் பாராளுமன்றப் பதிவிகளைத் தெரிந்தே துறக்கவேண்டிய நிலை அமிர்தலிங்கம் தலைமையிலான பாராளுமன்ற அரசியலாருக்கு 1983 அக்டோபர் மாதத்தில் ஏற்பட்டது.

ஆறாம் சட்டத்திருத்தத்தை எதிர்த்த வீரனாக இந்தியாவில் அஞ்ஞாதவாசம் புரிந்த அமிர், 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம், அதைத் தொடர்ந்த இந்திய-புலிகள் போர் ஆகியவற்றுக்கு அடுத்ததாக இலங்கை திரும்பி, தான் பிறந்த வட்டுக்கோட்டைத் தொகுதியிலோ, அல்லது தான் முன்னர் போட்டியிட்ட காங்கேசன்துறைத் தொகுதியிலோ போட்டியிட முடியாத நிலையில் மட்டக்களப்பில் போட்டியிட்டுக் கட்டுக்காசும் இழந்து தோல்வியுற்றார். எனினும் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குள் நுழைந்த அவர், எந்த சத்தியப்பிரமாணத்தை 1983 இல் எதிர்த்தாரோ அதற்கு உட்பட்டு வட்டுக்கோட்டை மக்களாணைக்கு எதிராளியாக மாறினார். இது இந்தியாவின் நிர்ப்பந்தத்தினால் அவருக்கு ஏற்பட்ட நிலை.

ஆனால், அவர்கூட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை இன்னோர் இரண்டாவது தீர்மானம் மூலம் நுட்பமாக மறுதலிக்கும் ஓர் எதிர்காலம் தமிழர் அரசியலில் ஏற்படலாம் என்று கற்பனையில்கூட நினைத்திருக்கமாட்டார்.

தற்போது அந்தச் சூழல் சீனா எனும் பூச்சாண்டியைக் காட்டி இந்தியாவிடம் ஈழத்தமிழருக்கான சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவு பெற்றுவிடலாம் என்று கருதும் சில விற்பன்னர்களால் உருவாகியிருப்பது "காலக்கொடுமை".

இவர்களுக்கெல்லாம் ஒன்று ஏனோ புரிவதில்லை. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மறுதலித்து இன்னொரு வட்டுக்கோட்டை இரண்டல்ல, இருபதல்ல, இருநூறும் வரமுடியாது. அதுவே சுயநிர்ணய உரிமை என்பதன் தார்ப்பரியம்.

இலங்கைத் தீவில் புவிசார் அரசியலில் அரசுரிமை கொண்ட சிங்கள - பௌத்த அரசு தனது ஒற்றையாட்சிச் சட்டத்தை மட்டுமல்ல, தமிழர் தாயகத்தையே கபளீகரம் செய்து, எல்லா வெளிச்சக்திகளுக்கும் பங்கு போட்ட ஏலவிற்பனை செய்துவிட லாம் என்ற புவிசார் அரசியல் பாடத்தின் அடுத்த பக்கங்களை புரட்டிக்கொண்டிருந்தது.

இனியென்ன, "முள்ளிவாய்க்காலும் நமஹ, நந்திக்கடலும் நமஹ" என்று சொல்ல இன்னும் ஓர் அணி வரலாம். ஏன், இதே அணியும் அதைச் செய்யலாம்.

ஏற்கனவே, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மேற்கு நாடுகளில் மீளுறுதி செய்யும் 2009 நகர்வில் முன்னோடிப் பங்கேற்று, 2009 இன் பின்னர் அதைக் கேலிக்கூத்தாகச் சித்தரித்து கொட்டைப்பாக்கு என்று சொன்னவர்களையும் வென்று வலம்வந்த தார்ப்பரியமும், தமிழகத்து முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அவர்களே அந்தத் தீர்மானத்தை தமிழக சட்டமன்றத்தில் முன்னெடுக்க வேண்டியிருந்த வரலாறு ஏற்பட்டதையும் இவர்கள் ஏனோ மறந்துவிட்டு, வட்டுக்கோட்டை-2 என்று நாமம் நல்கியிருக்கிறார்கள்.

ஜெயலலிதா அம்மையார் நிறைவேற்றிய தீர்மானத்தை தமிழகத்தில் எடுத்துச்செல்ல முடியாதவர்களுக்கு, ஆறாம் சட்டத்திருத்தத்தின் குற்றவாளிக் கூண்டிற்குள் இருக்கும் ஈழத்தமிழ் அரசியல்வாதிகள் தேவைப்படுகின்றனர், அதுவும் மீண்டும் "சுயநிர்ணயம்" என்று சொல்வதற்கு! ▮

> இப்போது வடக்கு , கிழக்கில் தமிழர்களின் மனங்களை வெல்வதற்கு சீனாவுக்குக் கிடைத்திருக்கும் ஆயுதம்தான் தடுப்பூசி. இலங்கை மக்கள் அனைவருக்கும் செபரெம்பருக்குள் கோவிட் தடுப்பூசி போட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கொடுத்திருப்பது சீனாதான். காரணம் சீனாவின் சினோபாம் தடுப்பூசி இலங்கைக்குத் தாராளமாகக் கிடைக்கின்றது.




# சீனாவின் ‘தடுப்பூசி இராஜதந்திரம்’

அகிலன்

வடபகுதியில் - பூநகரி, கௌதாரிமுனைப் பகுதியில் சீன நிறுவனம் ஒன்றினால் அமைக்கப்பட்டு இயங்கிவந்த கடலட்டைப் பண்ணை குறித்த தகவல்கள் கடந்த மாதம் வெளிவந்தபோது, தமிழ் மக்கள் மத்தியில் அதற்கு எதிரான உணர்வுகள் வெளிப்பட்டன. அதற்கு அனுமதி கொடுத்தது யார்? அதனை எவ்வாறு செயற்படுவதற்கு அனுமதிக்க முடியும்? என்ற கேள்விகள் தமிழ்க் கட்சிகளால் எழுப்பப்பட்டன. இது குறித்த செய்திகள் தமிழ் மக்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

யாழ். மாவட்ட எம்.பி.க்களான எஸ். சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்றவர்கள் நேரடியாகச் சென்று கள ஆய்வுகளையும் செய்திருந்தார்கள். வடபகுதியில் சீனா கால் பதிப்பதை ஏற்றுக்கொள்வதற்குத் தமிழ் மக்கள் தயராகவிருக்கவில்லை என்பதை இந்த அரசியல்வாதிகளும் பிரதிபலித்தார்கள். அதேவேளையில், இதன் மூலம் தமிழ் மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து, பொருளாதார நலன்கள் அவர்களுக்குக் கிடைக்கும் என்றால் அதனை அனுமதிக்கலாம், ஆனால், இந்தியாவின் பாதுகாப்பை கேள்விக்கு உட்படுத்தாமல் அது செயல்பட வேண்டும் என்ற கருத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் முன்வைக்கப்பட்டிருந்தது.

சிறிதரனும், கஜேந்திரகுமாரும் தெரிவித்த கருத்துக்களில் இரண்டு விடயங்கள் பொதிந்திருந்தன. ஒன்று - தமிழ் மக்களுடைய உணர்வுகளை அவர்கள் பிரதிபலித்தார்கள். இரண்டு - இந்தியாவின் பாதுகாப்புக்கு சீனாவின் வடபகுதிப் பிரசன்னம் ஆபத்தானது என்ற எச்சரிக்கையையும் வெளிப்படுத்தியிருந்தார்கள். அதன்மூலம், இந்தியாவின் நன்மதிப்பைத் தக்கவைப்பது அவர்களுடைய நோக்கமாக இருந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று தீவுகளில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை சீனா அமைக்கவுள்ளதாக செய்திகள் வெளியான போதுகூட இதேவிதமான பிரதிபலிப்பைத்தான் பார்க்க முடிந்தது. தமிழ்த் தரப்பினரது கடுமையான அழுத்தங்களுடன், இந்தியாவும் நெருக்கடியைக் கொடுக்க குறிப்பிட்ட திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகவே தெரிகின்றது. இந்தத் திட்டங்களை இந்தியாவுக்குக் கொடுத்திருந்தால், தமிழ்க் கட்சிகளும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கும். தமிழ் மக்களும் அதனை வரவேற்றிருப்பார்கள்.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்துக்கு அம்பாந்தோட்டையும், கொழும்பு துறைமுக நகரமும் போதுமானவையாக




இருந்தாலும் கூட, வடபகுதியிலும் தமது இருப்பைப் பேணுவது சீனாவின் உபாயங்களுக்குப் பலத்தைச் சேர்ப்பதாக இருக்கும். அதற்கான உபாயங்கள் சிலவற்றை சீனா வகுத்திருக்கின்றது. கொழும்பில் ராஜபக்ஷக்கள் அதிகாரத்திலிருப்பது இவ்விடயத்தில் சீனாவுக்கு அதிகளவு வாய்ப்புக்களைக் கொடுக்கின்றது.

இதில் அவதானிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சம் சீன எதிர்ப்புணர்வு தமிழ் மக்களிடம் காணப்படுகின்றது என்பதுதான். தென்பகுதியில் ராஜபக்ஷக்களுடன் சீனா நெருக்கமாக இருப்பது மட்டும் தமிழ் மக்களின் இந்த உணர்வுக்குக் காரணமல்ல. தமிழகத்தை - இந்தியாவை தமிழ் மக்கள் தமது தொப்புள்கொடி உறவுகளாகப் பார்ப்பதும் இதற்குக் காரணம். தமிழ் மக்களின் மனங்களில் காணப்படும் சீன எதிர்ப்புணர்வுக்கு அதுவும் ஒரு காரணம்.

தமிழ் மக்களுடைய இந்த உணர்வுகளைப் புரிந்து கொண்டதாகவே சீனாவும் இருக்கின்றது. வடக்கு, கிழக்கில் தமது செயற்பாடுகளை விஸ்தரிக்க வேண்டுமானால், தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டும் என்பதில் சீனா இப்போது கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

தமிழ் மக்களை இலக்கு வைத்து பல தசாப்தங்களுக்கு முன்னரே பீஜிக்கிங் வானொலியில் தமிழ் ஒலிபரப்பு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அது வெறுமனே சீன கம்யூனிஸக் கோட்பாடுகளின் பிரசாரத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டிருந்தது. இலங்கையிலும் இந்தியாவிலும் மிகவும் குறைந்தளவு நேயர்களே அதற்கு இருந்தார்கள். இலங்கையைச் சேர்ந்த சின்னத்தம்பி தமிழர் ஒருவர் அங்கு பணியாற்றியிருந்தார். ஆனால், சீனர்கள்தான் அதிகளவுக்குத் தமிழைக் கற்று அந்த ஒலிபரப்பை நடத்தினார்கள் என்பது முக்கியமானது. அப்போதே சீனர்கள் தமிழைக் கற்கத் தொடங்கிவிட்டார்கள்.

இப்போது வடக்கு, கிழக்கில் தமிழர்களின் மனங்களை வெல்வதற்கு சீனாவுக்குக் கிடைத்திருக்கும் ஆயுதம்தான் தடுப்பூசி. இலங்கை மக்கள் அனைவருக்கும் செப்டம்பருக்குள் கோவிட் தடுப்பூசி போட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கொடுத்திருப்பது சீனாதான். காரணம் சீனாவின் சினோபாம் தடுப்பூசி இலங்கைக்குத் தாராளமாகக் கிடைக்கின்றது. அமெரிக்காவின் ‘பைசர்’ மற்றும் ‘மடோனா’ போன்ற தடுப்பூசிகளின் விலை அதிகமாகக் காணப்படுகின்றது. அதனைவிட, அவற்றைப் பேணிப்பாதுகாப்பதில் காணப்படும் சிரமங்களும், சீனாவின் தடுப்பூசியை நோக்கி இலங்கை செல்வ தற்குக் காரணமாகவுள்ளது. அதே வேளையில், குறிப்பிட்டளவு தொகை யான தடுப்பூசியை அன்பளிப்பாகவும் சீனா வழங்குகின்றது.

ஆனால், இதிலுள்ள பிரச்னை என்னவென்றால், வெளிநாடுகளுக்குச் செல்வதற்காகக் காத்திருப்பவர்களும், உயர்கல்வி வீஸாவில் வெளிநாடுகளுக்குச் செல்லவிருக்கும் மாணவர்களுக்கும் சீனத் தடுப்பூசி ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மேற்கு நாடுகள் சீனத் தடுப்பூசி போட்டவர்களை ஏற்க முடியாது எனக் கூறிவிட்டன. வடபகுதியில் சீனத் தடுப்பூசியைப் பெறுவதற்குக் காணப்படும் தயக்கத்துக்கு இதுவும் ஒரு காரணம்! அந்தத் தயக்கத்துக்கு மத்தியிலும் பெருந்தொகையானவர்கள் சீனத் தடுப்பூசியைத்தான் பெற்றுக்கொள்கின்றார்கள்.

அதேவேளையில், இந்த நிலைமைகளைப் பயன்படுத்தி வடபகுதி மக்களின் மனங்களை வெல்வதற்கு இந்தத் தடுப்பூசியை ஒரு இராஜதந்திரமாகப் பயன்படுத்துவது சீனாவின் உத்தியாகவுள்ளது. கடந்த வாரம் 16 இலட்சம் தடுப்பூசிகள் சீனாவிடமிருந்து கிடைத்தன.

ஜனாதிபதி செயலகத்தில் இந்த தடுப்பூசிகளைக் கையளிக்கும் நிகழ்வில், ஜனாதிபதி முன்பாக வைத்தே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சீனத் தூதுவர் அவற்றைக் கையளித்தார். இவை வடக்கு கிழக்கு மக்களுக்காக என பெரியளவில் பிரசாரப்படுத்தப்பட் டது.

அதேவேளையில் சீனத் தூதரகத்தின் ருவிட்டர் பதிவுகளிலும் இவை குறித்து அதிகளவுக்குப் பிரசாரப்படுத்தப்பட்டது. தமிழ் மொழியிலேயே அவ்வாறான பதிவுகளைச் சீனத் தூதரகம் வெளியிட்டமையும் கவனிக்கத்தக்கது.

வடக்கில் சீனாவின் முதலீட்டுத் திட்டங்களை நிராகரிக்கும் தமிழ் மக்களை நோக்கி தடுப்பூசிகளை சீனா வழங்குகின்றது. தற்போது கொரோனா தீவிரமாகப் பரவிவரும் நிலையில், அதற்கு எதிராக இருக்கக்கூடிய ஒரே ஆயுதம் தடுப்பூசிதான்.

ஏற்கனவே உறுதியளித்தபடி அஸ்ரா - செனேகா தடுப்பூசிகளை இந்தியாவால் வழங்க முடியாமல் போய்விட்டது. அமெரிக்கத் தடுப்பூசி அதன் விலை - பாதுகாத்து வைப்பதிலுள்ள சிரமம் போன்றவை காரணமாக குறைந்தளவிலேயே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. வெளிநாடு செல்பவர்களுக்கு மட்டுமே அது வழங்கப்படுகின்றது. இந்தப் பின்னணியில், சீனத் தடுப்பூசியை நோக்கி வடக்கு கிழக்கு மக்கள் செல்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இதனை சீனாவும் நன்கு பயன்படுத்திக்கொள்கின்றது. சீனத் தடுப்பூசி தமிழ் மக்களுடைய இரத்தத்தில் கலக்கும் போது தமிழ் மக்களுடைய மனங்களிலும் மாற்றங்கள் ஏற்படும் என்பது சீனாவின் நம்பிக்கையாக இருக்கலாம்! ■


# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**மாதிரிப் பரீட்சை விடைத்தாள் - I** **நேரம் - 45 நிமிடம்**


- **1,2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதிகளைத் தெரிவு செய்க.**

1.



(1) (2) (3)


2.



(1) (2) (3)


- **3,4 ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய உருக்கூட்டத்திலிருந்து வேறுபடுகின்றது. வேறுபடும் உருக்கூட்டததைத் தெரிவு செய்க.**

3.



(1) (2) (3)

4.



(1) (2) (3)

- **5,6 ஆகிய வினாக்களில் தரப்பட்டவற்றில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது எது?**

5. தென்சிலுவை, மண்வெட்டி, கலப்பை, விருச்சிகம், மகுடி, புல்லாங்குழல்
   1) விருச்சிகம் 2) மண்வெட்டி 3) மகுடி


6. மனம், சிரசு, வதனம், உள்ளம், அகம், அகங்காரம்
   1) உடல் 2) உள்ளம் 3) அகங்காரம்

- **7, 8 ஆகிய வினாக்களில் ○ = 3, ▼ = 2, ▭ = 5 ■ = 1 ▲ = 6 ● = 8 என இட்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

7.
```
  ▼ ●
+ ○ ▭
=====
```
1) ▲▼ 2) ▲○ 3) ▭○


8.
```
  ▲ ■ ▼
− ○ ▭ ▲
=======
```
1) ○▭▲ 2) ▲▭▼ 3) ▼▭▲

9. பின்வரும் உருக்களினுள்ளே காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கையை முறையே காட்டும் விடையைத் தொரிவு செய்க.



1) 6, 8, 20 2) 8, 12, 20 3) 6, 8, 12

10. பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




1) 16
2) 18
3) 17

# ரிஷாத்தின் மைத்துனரால் மேலுமொரு பெண் துஷ்பிரயோகம்!

## பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 03

"பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணியாற்றிய 29 வயதான மற்றுமொரு பணிப்பெண்ணையும் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். விசாரணைகளின்போது இது தெரியவந்துள்ளது."

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்தார்.

ரிஷாத்தின் இல்லத்தில் பணியாளாக இருந்து தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்த சிறுமி ஹிஷாலினி தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் குழுவிடம், குறித்த 29 வயதான பெண் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ரிஷாத் எம்.பியின் வீட்டில் 22 வயது யுவதி தான் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் என்று ஏற்கனவே வாக்குமூலமளித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் ரிஷாத் எம்.பியின் மனைவியின் சகோதரர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ரிஷாத் எம்.பியின் வீட்டில் பணியாற்றிய மேலுமொரு பெண்ணிடம் நேற்று முன்தினம் வாக்குமூலம் பெறப்பட்டபோது அவர் ரிஷாத் எம்.பியின் மனைவியின் சகோதரரால் ஏழு தடவைகள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று வாக்குமூலமளித்துள்ளார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறித்த பெண் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவர் ரிஷாத் எம்.பியின் வீட்டில் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டு வரை பணியாற்றியுள்ளார். குறித்த பெண் தற்போது களனிப் பிரதேசத்தில் பணியாற்றி வருகின்ற நிலையிலேயே அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் குறித்த பெண், ஹிஷாலினி மரணமடைந்த வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டன" - என்றார். (இ)

# ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய 11 பெண்களில் மூவர் உயிரிழப்பு

## விசாரணையில் தெரியவந்துள்ளது என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஓக. 03

**"பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் கடந்த 2009ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் பணியாற்றிய 11 பெண்களில் மூவர் மரணமடைந்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது."**



- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிவந்த நிலையில் உயிரிழந்த 16 வயது சிறுமியான ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பான நேரடி சாட்சியங்கள், தொலைபேசி சாட்சியங்கள், தொழில்நுட்ப சாட்சியங்கள் தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹிஷாலினிக்கு முன்பாக 2009 ஆம் ஆண்டிலிருந்து இது வரையான காலப்பகுதியில் டயகமை பகுதியைச் சேர்ந்த தரகரினூடாக 11 பெண்கள் ரிஷாத்தின் வீட்டுக்குப் பணிப்பெண்களாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் இதுவரை உயிரிழந்தனர்.

இவர்களில் ஒருவர் ஹிஷாலினி. மற்றுமொருவர் புற்றுநோய் காரணமாக உயிரிழந்தார். மற்றுமொரு பெண் ரிஷாத் எம்.பியின் வீட்டிலிருந்து வெளியேறிய பின் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களைத் தவிர மீதமுள்ள 8 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் இருவரிடம் இறுதி வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# டெவோன் நீர்வீழ்ச்சியில் பெண்ணின் சடலம் மீட்பு

பத்தனை, ஓக. 03

பத்தனை டெவோன் நீர்வீழ்ச்சியின் கீழ்ப் பகுதியில் நீரில் மிதந்துகொண்டிருந்த பெண்ணொருவரின் சடலம் நேற்று முன்தினம்மாலை மீட்கப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தனை நகரைச் சேர்ந்த வீரமலை மலர்விழி (வயது 52) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியே சென்றவர் வீடு திரும்பாத நிலையிலேயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். குறித்த பெண்ணின் சமுர்த்தி அட்டை, குடை மற்றும் காலணி ஆகியன கடந்தவாரம் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகிலிருந்தது எனத் தெரிவித்த பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில்பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை, கடந்த 18 ஆம் திகதி டெவோன் நீர்வீழ்ச்சியில் வீழ்ந்து 19 வயதான யுவதி ஒருவரும்காணாமல்போயிருந்த நிலையில், அவர் தொடர்பில் இது வரையில் எந்தத் தகவல்களும் அறியக்கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (இ)

# சுகாதார விதிமுறைகளை பின்பற்றி செயல்படவும்!

## பொலிஸ் பேச்சாளர் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 03

"நீண்ட நாட்களுக்குப் பின்னர் அரச சேவை நேற்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ள நிலையில், பொதுப்போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துபவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயல்பட வேண்டியது மிகவும் அவசியம்."

- இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தூரப் பிரதேசங்களைச் சேர்ந்த அரச சேவையாளர்கள் பணிக்குத் திரும்பி வருகின்றனர்.

அரச சேவையாளர்களின் நன்மை கருதி பொதுப் போக்குவரத்துச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விசேடமாக பொலிஸ் தலைமையகத்தால் விசேட அறிவிப்பு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

அலுவலகப் பணிகளுக்காக வரும் சேவையாளர்கள், அத்தியாவசியத் தேவைகளுக்காக பயணிப்பவர்கள் ஆகியோருக்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது அவர்களது சேவைக்குச் செல்வதற்கு அனுமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று மாகாண எல்லைகளில் வைக்கப்பட்டுள்ள வீதித் தடைகள், ஏனைய பிரதான வீதிகளில் வைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளில் எவ்வித இடையூறும் ஏற்படுத்தாது அவர்கள் பயணிப்பதற்குப் பொலிஸார் அனுமதி வழங்கி வருகின்றனர்.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நிறுவனமொன்றில் பணியாற்றுவதற்கான அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காகக் குறித்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வருபவர்களுக்கு, அதற்கான ஆவணங்களை வழங்குவதற்கு ஒத்துழைக்குமாறும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்தும்போது சுகாதார அமைச்சால் விடுக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிச்செயற்படுமாறு பயணிகளுக்கும் பொதுப்போக்குவரத்தில் ஈடு படுபவர்களுக்கும் அறிவுறுத்து கின்றோம்.

சகல சந்தர்ப்பங்களிலும் முகக்கவசங்களை அணிந்திருப்பது அவசியம். சுகாதார விதிமுறைகளை மீறி பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (இ)

# திருமலை மோ.சைக்கிள் விபத்தில் யுவதி மரணம்

திருகோணமலை, ஓக. 03

திருகோணமலை - ஹொரவபொத்தானை பிரதான வீதியின் திரியாய் சந்தியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர், தம்பலகாமம் பகுதியில் உள்ள ஆடைத்தொழிற்சாலைக்குப் பணிக்குச் செல்வதற்காக மற்றுமொரு பெண்ணுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

குறித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் மயிலங்குடா பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியாவர். (இ)

# பரீட்சை முடிவை வெளியிடுவதில் நெருக்கடி காரணத்தை விளக்குகின்றார் ஆணையாளர்

கொழும்பு, ஓக. 03

2020ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் மேலும் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பீ. சனத் பூஜித் தெரிவித்தார்.

அழகியல் பாடங்களுக்கான செயல்முறை பரீட்சைகள் உரிய நேரத்தில் நடத்த முடியாதுள்ளமை இதற்கான ஒரு முக்கிய காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறவிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார்.



2020 ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை இந்த ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நடைபெற்றது.

நாடு இயல்பு நிலையிலிருந்தால் ஜூன் மாதத்தில் முடிவுகளை வெளியிட்டிருக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் கூறினார்.

இலங்கையில் கொரோனா 3ஆம் அலை காரணமாக ஏப்ரல் நடுப்பகுதியில் தொடங்கி, அரசு அலுவலகங்களின் ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்யப் பணிக்கப்பட்டனர். அதேவேளை, ஒரு மாதகால பயணக்கட்டுப்பாடுகளை அரசு விதித்தது.

இந்த நடவடிக்கைகளும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது சாதாரணதரப் பரீட்சை முடிவுகளை வெளியிடுவது தொடர்பான பணிகள் நடந்து கொண்டிருக்கின்ற போதிலும் தொற்று நோயுடன் நாட்டின் சூழ்நிலைகள் மாறும்போது சரியான திகதியை வெளியிட முடியாதுள்ளது எனவும் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் பீ. சனத் பூஜித் மேலும் தெரிவித்தார். (இ)

# 2023இல் தேர்தல் நடத்தப்படும் மியன்மார் படைகள் அறிவிப்பு

*யங்கூன், ஓக. 03*

2023 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மியன்மாரில் தேர்தல் நடத்தப்படும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

மியன்மாரில் தேர்தல் மூலம் தெரிவான ஆங்சான் சூகி தலைமையிலான கட்சி ஆட்சியை பிடித்தது. பதவியேற்கவிருந்த கடந்த பெப்ரவரி முதலாம் திகதி அந்த நாட்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது.

இதையடுத்து, ஆங்சான் சூகி, ஜனாதிபதி வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலை



வர்கள் இரகசியமான இடங்களில் சிறைவைக்கப்பட்டனர்.

இந்நிலையில், ஜனநாயக ஆட்சியை வலியுறுத்தி பொதுமக்கள், மாணவர்கள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டங்களில் இதுவரை 900இற்கும் அதிகமானவர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர். அத்துடன், போராட்டங்கள் மீதான இராணுவ அடக்குமுறையும் தொடர்கிறது.

இந்த நிலையில், இராணுவ ஆட்சியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்றும், 2023 ஓகஸ்ட் மாதம் தேர்தல் நடத்தப்பட்டு புதிய அரசு அமைக்கப்படும் எனவும் இராணுவ தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)



## ஆப்கான் படைகள் தாக்குதல்: 455 தலிபான்கள் உயிரிழப்பு!

*காபூல், ஓக. 03*

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படையினர் நேற்று காலை வரையான கடந்த 24 மணி நேரத்தில் நடத்திய தீவிர தாக்குதலில் 455 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 232 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நங்கர்ஹார், பக்தியா, பக்திகா, லோகர், கந்தஹார், ஹெராட், ஃபார்யப், ஜவ்ஜன், பால்க், சமங்கன், ஹெல்மண்ட், தகர், குண்டுஸ் மற்றும் பாக்லன் ரூ கபீசா மாகாணங்களிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

உயிரிழந்த தலிபான் தீவிரவாதிகளிடம் இருந்து ஆயுதங்களையும் ,13 சக்திவாய்ந்த வெடிகுண்டுகளையும் கைப்பற்றப்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

தலிபான்கள் வசமிருக்கும் 193 மாவட்டங்களின் மையங்கள் மற்றும் 19 மாவட்ட எல்லைகளை மீட்கும் பணியில் தீவிரமாக இயங்கி வரும் இராணுவத்தினருக்கும் - தலிபான்களுக்கு இடையிலான சண்டையில் கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவரை 4,000 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர் என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்தக் காலப்பகுதியில் தலிபான்களின் தாக்குதலில் 7 ஆயிரம் படையினர் காயமடைந்தனர். ஆயிரத்து 600 படையினர் சிறை பிடிக்கப்பட்டனர் பொதுமக்கள் 2 ஆயிரம் பேரை தலிபான்கள் சுட்டுக்கொன்றனர் எனவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)



## ஜேர்மனியில் 600பேர் கைது

*பெர்லின், ஓக. 03*

ஜேர்மனியில் கொரோனா கட்டுப்பாடுகளை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற 600 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர். அவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்புகளிடையே மோதல் ஏற்பட்டது. இதில், போராட்டம் நடத்தியவர்களில் 600 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர். 10 பொலிஸார் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சீனாவை அச்சுறுத்தும் டெல்டா: 5 மாகணங்களில் கட்டுப்பாடுகள்!

*பீஜிங், ஓக. 03*

சீனாவில் கொரோனா வைரஸின் டெல்டா திரிபு வைரஸ் வேகமாகப் பரவி வருகின்றது. இதனால், 5 மாகாணங்களில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு சீனாவின் வுஹான் நகரில் கொரோனா தொற்று பரவ ஆரம்பித்தது. இது இன்று முழு உலகுக்கும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. ஆனால், முன்னதாக சீனாவில் தொற்று கட்டுப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சீனாவின் ஜியாங்சூ, செச்சுவான், லியானிங், ஹூனான், ஹூபெய் உள்ளிட்ட 5 மாகாணங்களிலும் தலைநகர் பீஜிங் உட்பட 13 நகரங்களிலும் டெல்டா திரிபு வைரஸ் பரவியுள்ளது. இதையடுத்து அந்த மாகாணங்களில் கடும் கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஜியாங்சூ மாகாணத்தின் தலைநகரான நான்ஜிங்கில் 41ஆயிரம் குடும்பங்கள் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளன. இதேபோன்று அந்த நகரில் வாழும் 93 இலட்சம் மக்களும் கட்டாயம் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இதேவேளை, சீனாவில் 52.9 சதவீதம் பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் 70 சதவீதம் பேருக்கு தடுப்பூசி போடப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. (ஐ)



## கலிபோர்னியா காட்டு தீ: 244,000 ஏக்கர் வனம் நாசம்!

*கலிபோர்னியா, ஓக. 03*

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் இதுவரை 2 இலசட்த்து 44 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகின. இது வடக்கு கலிபோர்னியா காட்டின் 32 சதவீத பகுதியாகும். இந்தக் காட்டுத் தீக்கு காரணமானவர்களை தேடி வருகின்றோம் என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

வெப்பத்தின் மோசமான விளைவுகளால் 69 கட்டடங்கள் இடிந்து விழுந்தன. அத்துடன் 9 கட்டடங்கள் தீயால் மோசமான பாதிப்புக்களை சந்தித்துள்ளன.

தவிர, அமெரிக்கா முழுவதும் 83இற்கும் மேற்பட்ட வனப்பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இதனால் 10 ஆயிரத்து 435 கட்டடங்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றன என்று வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இதுவரை ஒட்டுமொத்தமாக 400 கட்டடங்களும் 342 வாகனங்களும் தீக்கிரையாகின என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தடைகளுக்கு பதிலடி நடவடிக்கையாக ஐரோப்பாவில் அகதிகள் புக வசதியாக எல்லையை திறந்து விட்டது பெலராஸ்!

பால்டிக் நாடுகள் ஊடாக ஐரோப்பாவினுள் குடியேறிகள் நுழைவதற்கான புதிய வழியை பெலாரஸ் ஏற்படுத்தி உள்ளது. இதனால் அந்த நாட்டுடனான ஐரோப்பிய ஒன்றிய எல்லைகளில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளது.

பெலாரஸ்மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பல தடைகளுக்குப் பதிலடியாக அந்நாடு அங்குள்ள வெளிநாட்டு குடியேறிகளைத் தனதுஎல்லை வழியே ஐரோப்பாவினுள் நுழைய விட்டுள்ளது.

கடந்த பல வாரங்களாக பெலாரஸின் எல்லை ஊடாக அயல் நாடான லித்துவேனியாவினுள் பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டவர்கள் நுழைந்ததை அடுத்து லித்துவேனியா அதன் எல்லையில் அவசர நிலையைப் பிரகடனம் செய்துள்ளது.

ஜூன் மாதம் தொடக்கம் இதுவரை லித்துவேனியா எல்லைக்குள் நுழைந்த வெளிநாட்டவர்கள் சுமார் மூவாயிரம் பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்னர் பெலாரஸ் ஆட்சியை எதிர்க்கின்றவர்கள் மட்டுமே லித்துவேனியாவினுள் எல்லை தாண்டி நுழைவது வழக்கம். தற்போது ஏனைய நாட்டவர்களும் அந்த வழியைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

நாட்டுக்குள் வருகின்ற சட்டவிரோத குடியேறிகளைக் கட்டுப்படுத்துவதற்கு அவசர சட்டங்களை லித்துவேனியா பாராளுமன்றம் நிறைவேற்றி உள்ளது. எல்லை தாண்டி வருவோரை அவர்களின் தஞ்சம் கோரும் உரிமைகளைக் குறைத்து பெரும் எண்ணிக்கையில் ஒன்றாகப் பெரும் தடுப்பு முகாம்களில் அடைத்து




வைப்பதற்குப் புதிய சட்டம் இடமளிக்கிறது.

பெலாரஸூடனான தனது சுமார் 679 கிலோ மீற்றர்கள் நீளமான எல்லையில் வேலிக்கு மேலதிகமாகப் புதிய தடுப்புச் சுவர்களை நிறுவ உள்ளதாக லித்துவேனியா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பெலாரஸ் நாட்டுக்கு எதிராக விதித்து வருகின்ற தடைகளை லித்துவேனியா ஆதரித்து வருகின்றது. அத்துடன், பெலாரஸின் ஆட்சியாளர்களை எதிர்த்து விமர்சிக்கின்ற அந்நாட்டின் எதிரணியின ருக்கு லித்துவேனியா புகலிடம் அளித்துள்ளது. பெலாரஸ் எதிர்க்கட்சித் தலைவி ஸ்வியாட்லானா நாட்டை விட்டு வெளியேறி லித்துவேனியாவில் வாழ்ந்துவருகிறார். இதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையே பெரும் பகைமை உருவெடுத்துள்ளது. (ஐ)

# 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்றார் ஜேக்கப்ஸ்!




ரோக்கியோ, ஓக. 03

100 மீற்றர் ஓட்டத்தில் இலக்கை 9:80 செக்கன்களில் கடந்து தங்கம் வென்றார் இத்தாலியின் மார்செல் ஜேக்கப்ஸ்.

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம் பிக் போட்டியில் ஆண்களுக்கான 100மீற்றர் ஓட்டம் நேற்று முன்தி னம் நடந்தது.

இதிலேயே பந்தய துாரத்தை 9:80 செக்கன்களில் அடைந்த இத் தாலியின் மார்செல் ஜேக்கப்ஸ் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். இதன்மூலம் 100 மீற்றர் ஓட்டத்தில் இத்தாலிக்கு முதன்முறையாக தங்கப் பதக்கம் கிடைத்தது.

அடுத்த இரு இடங்களை அமெரிக்காவின் பிரெட் கெர்லி (9:84 செக்கன்கள்), கனடாவின் அன்ட்ரி டி கிராஸ் (9:89 செக்கன்கள்) முறையே வெள்ளி, வெண் கலம் வென்றனர். (ஐ)



## ஒலிம்பிக் முப்பாய்ச்சலில் சாதனை படைத்தார் யுலிமா!

ரோக்கியோ, ஓக. 03

ஒலிம்பிக்கில் பெண்களுக்கான முப்பாய்ச்சலில் வெனிசுலாவின் யுலிமா ரோஜஸ் 15.67 மீற்றர் பாய்ந்து உலக சாதனை படைத்தார்.

பெண்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியின் இறுதிச் சுற்று நேற்று நடந்தது. இதில் 2 வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வீராங்கனைகளுக்கும் 6 வாய்ப்புகள் வழங்கப்படும். இதில் எது அவர்களுடைய சிறப்பான தாண்டுதலோ, அது போட்டி முடிவாக எடுத்துக் கொள்ளப்படும்.

இதன்படி வெனிசுலாவின் யுலிமார் ரோஜஸ் 6ஆவது வாய்ப்பில் 15.67 (0.7) மீற்றர் தூரத்தை தாண்டினார். இதனால் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார். அத்துடன் பெண்களுக்கான முத்தட்டு நீளம் பாய்தலில் இதுவே உலக சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஷேன் வோர்னுக்கு கொரோனா தொற்று

சிட்னி, ஓக. 03

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

51 வயதான ஷேன் வோர்ண் உடல்நிலை பாதிக்கப் பட்டமையை தொடர்ந்து நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையிலேயே தொற்று உறுதி செய்யப்பட் டது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள் ளார். (ஐ)

## அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் தெரிவுகுழு தலைவராக பெய்லி!

சிட்னி, ஓக. 03

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் புதிய தெரிவுக் குழு தலைவராக முன்னாள் அணித் தலைவர் ஜோர்ஜ் பெய்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்த அணியின் தெரிவு குழுவில் 21 ஆண்டுகளும், 16 ஆண்டுகள் தலைவராகவும் இருந்த டிரோவர் ஹொன்ஸ் பதவி விலகியமையை தொடர்ந்து அந்த இடத்துக்கு பெய்லி நியமிக்கப்பட்டுள்ளார்.

பெய்லி கடந்த பெப்ரவரி மாதம் தெரிவு குழு உறுப்பினராக இணைந்த நிலையில் தற்போது தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

38 வயதான ஜோர்ஜ் பெய்லி 90 ஒருநாள் போட்டி, 30 இருபது - 20 போட்டி, 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். அவர் ஒருநாள் மற்றும் இருபது - 20 கிரிக்கெட்டின் 57 போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## 28 தங்கத்துடன் சீனா முதலிடம்!

ரோக்கியோ, ஓக. 03

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் 28 தங்கப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. எனினும், பதக்கங்களின் எண்ணிக் கையில் 61 பதக்கங்களுடன் அமெரிக்கா முன்னி லையில் உள்ளது.

நேற்று மாலை 5 மணி வரையான நிலைவரப்படி, சீனா, 28 தங்கம், 16 வெள்ளி, 15 வெண்கலங்களு டன் 59 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்கா 21 தங்கம், 24 வெள்ளி, 16 வெண்கலங் களுடன் 61 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தி லும், ஜப்பான் 17 தங்கம், 6 வெள்ளி, 10 வெண்கலங்க ளுடன் 33 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இலங்கை நேற்று வரை எந்தப் பதக்கத்தையும் வெல்ல வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## ஒலிம்பிக் ஹொக்கி போட்டியில் இந்திய மகளிர் அரையிறுதியில்!

ரோக்கியோ, ஓக. 03

ரோக்கியோ ஒலிம்பிக் மகளிர் ஹொக்கிப் போட் டியில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது. இந்திய மகளிர் அணி ஒலிம்பிக் போட்டியில் அரை யிறுதிக்கு முன்னேறியமை இதுவே முதல் தடவையாகும்.

நேற்று நடந்த காலியிறுதி போட்டியில் அவுஸ்திரே லிய அணியை இந்திய மகளிர் அணி எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தி இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது. (ஐ)

# துப்பாக்கி சுடுதல், பளுதூக்கலில் சீனாவுக்கு நேற்று இரண்டு தங்கம்!

ரோக்கியோ, ஓக. 03

ரோக்கியோ ஒலிம்பிக்கில் நேற்று நடந்த ஆண்களுக்கான 50 மீற்றர் ரைபிள் 3 பொசிசன்ஸ் துப்பாக்கி சுடும் போட்டியில் சீனா தங்கம் வென்றது.

அந்த நாட்டின் சாங்ஹோங் ஷாங் 466 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தார். மேலும் 466 புள்ளிக ளுடன் ஒலிம்பிக் மற்றும் உலக சாதனை படைத்து அசத்தினார்.

ரஷ்யா வீரர் செர்கே காமென்ஸ்கி 464.2 புள்ளிகள் பெற்று வெள்ளிப் பதக்கமும், சேர்பிய வீரர் மிலென்கோ செபிக் 448.2 புள்ளிகள் பெற்று வெண் கலப் பதக்கம் வென்றனர்.

பெண்களுக்கான 87 கிலோ எடைப்பிரிவு குறூப் ‘ஏ’ பளுதூக்குதல் போட்டியில் சீன வீராங்கனை வாங் ஸ்னாட்ச் முறையில் 120 கிலோ, க்ளீன் அன்ட் ஜெர்க் முறையில் 150 கிலோ என மொத்தம் 270 கிலோ எடையை தூக்கி தங்கப்பதக்கம் வென்றார்.




ஈகுவடார் வீராங்கனை யஜைரா தமரா 113+150 என 263 கிலோ எடையை தூக்கி வெள்ளிப்பதக்கம் வென்றார். டொமினிக்கன் குடியரசின் வீராங்கனை சான்டனா 116+140 என 256 கிலோ எடையை தூக்கி வெண்கல பதக்கம் வென்றார். (ஐ)

## சிறுமியை துஷ்பிரயோகம் செய்த ஆலயக் குருக்கள்?

கொழும்பு, ஓக. 03

குளியாப்பிட்டி-போஹிங்கமுவ பகுதியிலுள்ள இந்து ஆலயமொன்றின் குருக்கள் ஒருவரை கைது செய்யும் நடவடிக்கை யில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சிறுமியொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழேயே ஆலயத்தின் குருக்கள் ஒருவர் இவ்வாறு பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.

மகளின் காதல் தொடர்பை முறிப்பதற்காக போஹிங்கமுவ பகுதியில் வசிக்கும் தாயொருவர், தனது 15 வயதான மகளுடன் கடந்த 26ஆம் திகதி ஆலயத்துக்கு சென்றுள்ளார்.

இதன்போது, ஆலயத்தின் குருக்களினால் சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சந்தேக நபரான குறித்த குருக்கள், பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதுடன், கடந்த சில தினங்களாக ஆலயமும் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## மோட்டார் சைக்கிள் மோதியதில் பாதசாரி பரிதாபகரமாக மரணம்

கம்பஹா, ஓக. 03

கம்பஹா மாவட்டத்தின் யக்கல வீதி, நெழும் மாவத்தைக்கு அருகில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளொன்று பாதசாரி ஒருவர் மீது மோதியதில் குறித்த பாதசாரி பரிதாபகரமாக உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவரை கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் விபரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை.

விபத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் ஓட்டுநரைக் கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ரிஷாத் பயன்படுத்திய வீட்டை ஏற்க மறுத்த அமைச்சர் பந்துல!

கொழும்பு, ஓக. 03

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தனது உத்தியோகபூர்வ இல்லத்தை அரச பொது நிர்வாக அமைச்சிடம் ஒப்படைத்துள்ளார்.

அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தை, இதற்கு முன்னதாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் பயன்படுத்தி இருந்தாரென குறித்த காலப்பகுதியில் அந்த வீட்டினுள் சிறுமியொருவர் துஷ்பிரயோத்துக்கு உட்படுத்தப்பட்டாரென தெரிவித்தே அமைச்சர் பந்துல குணவர்தன இந்த தீர்மானத்துக்கு வந்துள்ளாரென அறியமுடிகிறது.

மேலும், அப்போதைய காலப்பகுதியில் உத்தியோகபூர்வ இல்லத்தை புதுப்பிப்பதற்காக 21 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.


## மரண அறிவித்தல்

மலர்வு 24 - 07 - 1942



உதிர்வு 01 - 08 - 2021

**செகநாதன் நல்லையா**

( BA, MA, Dip in Education )

(இளைப்பாறிய மேல் மாகாணகல்விப் பணிப்பாளர்)

கல்வயலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, சங்கத்தானையை வசிப்பிடமாகவும் கொண்ட செகநாதன் நல்லையா (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செகநாதன் – முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், ஜெயராஜன்,ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், தவரூபி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.08.2021) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ந.ப 12.00 மணியளவில் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.ஜெயராஜன் (மகன்)
076 833 2114


பணிகளைப் பொறுப்பேற்க அனுமதிக்குமாறு கோரி

## வடக்கு ஆளுநர் செயலகத்துக்கு முன் சுகாதார தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக.03

**வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

**தமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்துக்கமைய தமது பணிகளைப் பொறுப்பேற்க அனுமதிக்குமாறு கோரியே அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.**




வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் ஏற்கனவே வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்னால் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவர்களைக் கொழும்புக்கு வருமாறும், உயர்மட்ட சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தருவதாகவும் கூறியிருந்தார். அதற்கமைய போராட்டத்தில் ஈடுபட்டோருக்கும் அரச பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்பின்போது குறித்த சுகாதார தொண்டர்களை ஒரு இலட்சம் வேலைவாய்ப்புப் பட்டியலுக்குள் உள்வாங்குவதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அந்தப் போராட்டம் கைவிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தமக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்துக்கமைய தமது பணிகளைப் பொறுப்பேற்க அனுமதிக்கு மாறு கோரி அவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ - 03)



## பால் மாவுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 03

நாட்டின் பல பிரதேசங்களில் பால் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக உள்ளூர் சந்தையில் பால் மாவுக்குத் தட்டுப்பாடுகள் நிலவுகின்றது.

பால் மா நிறுவனங்கள் விலை அதிகரிப்புக்கு அனுமதி கோரியிருந்த நிலையில் அதற்கு அனுமதி வழங்காத நிலையிலேயே இந்தத் தட்டுப்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன்படி சிறுவர்களுக்கான பால் மா தவிர்ந்த மற்றைய அனைத்து வகை பால் மாவுக்கும் தட்டுப்பாடுகள் காணப்படுகின்றன.

இதேவேளை, சில பிரதேசங்களில் 'லாப்' சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடுகள் நிலவுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி மரணம்!

மொனராகலை, ஓக. 03

மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரெவி எல்லயில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காமினிபுர, ஒக்கம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 23, 30 வயதுடைய சகோதரர், சகோதரியே இவ்வாறு மரணமடைந்தனர்.

சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ள நிலையில் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் படல்கும்புர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

வவுனியா, ஓக. 03

வவுனியா மாவட்டம், புளியங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயினாமடு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புளியங்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

## பேஸ்புக்கினூடாக நட்பை ஏற்படுத்தி தங்கநகை திருடிய பெண் சிக்கினார்

கொழும்பு, ஓக. 03

பேஸ்புக்கினூடாக நட்பை ஏற்படுத்தி தங்கநகை திருட்டில் ஈடுபட்ட 24 வயது பெண்ணொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பேஸ்புக்கினூடாக சீதுவை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது யுவதியுடன் நட்பை ஏற்படுத்திக்கொண்ட சந்தேக நபர், அந்த யுவதியின் வீட்டுக்கு இரண்டு தடவைகள் சென்றுள்ளார். அத்துடன் இரண்டு தடவைகளுயும் யுவதியின் வீட்டிலிருந்த தங்கநகைகளைத் திருடியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

கொட்டுகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இறுதியாக நேற்றுமுன்தினம் யுவதியின் வீட்டுக்குச் சென்ற சந்தேகநபர், சுமார் மூன்றரைப் பவுண் தங்கநகைகளைத் திருடியுள்ளார் என விசாரணையில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(இ)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 571 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாணவர்கள் கல்வி வாய்ப்புகளை இழந்துள்ளனர் எனக் கூறினார்.

நாட்டின் தொலைதூரப் பகுதிகளில், குறிப்பாக இணைய அணுகல் இல்லாத பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு இது பெரும் பிரச்னைகளை ஏற்படுத்துகிறது என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

தற்போது மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றவுள்ள நிலையில் அவர்கள் தயாராக இருப்பதை நாங்கள் உறுதி செய்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சூழ்நிலையில், சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு உட் பட்டு, விரைவில் பாடசாலைகளைத் திறப்பதே முதன்மை குறிக்கோள் என்றும் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறினார்.

நேற்று முதல் அனைத்து அரச ஊழியர்களும் வழக்கம் போல் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே இந்த சூழலில் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் பாடசாலைகளுக்குச் சென்று திறப்பதற்குத் தேவையான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

## சிறுவர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்று பரவும் வீதம் அதிகரித்துள்ளதாக லேடி ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் பணிப்பாளர் ஜீ. விஜே சூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்குள் ளாகிய 70 சிறுவர்கள் தற்போது லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் கூறியுள்ளார்.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 25 பேரும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேரும், தெல்லிப் பழை ஆதார மருத்துவமனையில் 5 பேரும், கோப்பாய் பிரதேச மருத்துவ மனையில் 2 பேரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவரும், சங்கானை பிரதேச மருத்துவ மனையில் ஒருவரும், நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரு வரும், பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் ஒருவரும் என 47 பேர் தொற்றாளர்களாக இனங்காணப் பட்டனர்.

இதேபோன்று கிளிநொச்சி பொது மருத்துவமனையில் 4 பேரும், பளை பிரதேச மருத்துவமனையில் 2 பேரும், மன்னார் பொது மருத்துவமனையில் 3 பேரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவ மனையில் 4 பேருமாக 13 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தவிர, முழங்காவில் கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்ட மூவருக்கும் தொற்று உறுதிப்படுத் தப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று 177 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 11 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

இதன்படி, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நால்வரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவரும், வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவரும், வவுனியா சிறையில் ஒருவரும், காங்கேசன்துறை கடற்படை முகாமை சேர்ந்த இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,958 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 80 ஆயிரத்து 868 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## கோவக்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் பிரிவு துணைத் தலைவர் மார்கஸ் கார்பெண்டர் மற்றும் பாராளுமன்ற துணை பொதுச் செயலாளர் திருமதி குஷானி ரோஹனதீர ஆகியோரும் பங்கேற்றனர்.

இராஜதந்திர மற்றும் பொருளாதார விடயங்கள் உட்பட இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் பரஸ்பர நலன் சார்ந்த பல விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் விவாதிக்கப்பட்டது. அத்துடன், இலங்கையில் எரிசக்தி துறையின் எதிர்காலத்தின் அமெரிக்காவின் முதலீடுகள் குறித்தும் பேசப்பட்டது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து மகிழ்ச்சியடைவதாக அலைனா ரெப்லிட்ஸ் கூறினார்.

ஒட்டுமொத்த உலகமும் எதிர்கொள்ளும் கொவிட் தொற்று நோய் நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையின் அபிவிருத்தி மற்றும் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் சபாநாயகருக்கு தெரிவித்தார்.

## விசேட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பரவலில் அபாயகரமான நாடுகளின் பட்டியலில் நாம் உள்ளோம்.

நாடுகளின் தலைவர்கள் எடுக்கும் தீர்மானங்களால் விசேடமாக தொற்று நோய் தொடர்பில் விசேட நிபுணர்கள் கூறும் அறிவுரைகள், அதேபோன்று உலக சுகாதார அமைப்பின் அறிவுரைகளைப் பின்பற்றி நடக்காத நாடுகளில் மக்களுக்கு தங்களது உயிரை பணயம் வைக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு சிறந்த உதாரணம் அமெரிக்கா. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் காலப் பகுதியில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரிந்தது. அவரின் தனிப்பட்ட தீர்மானங்கள் காரணமாக விசேட நிபுணர்களின் ஆலோசனைகளுக்கு செவிமடுக்காது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாது நாட்டில் முன்னெடுத்த நடவடிக்கைகளால் அமெரிக்க மக்களில் ஐந்து இலட்சம் பேர் தங்களது உயிரைக் கொரோனாவுக்குப் பணயம் வைத்தனர்.

அதேபோன்று கொரோனா வைரஸ் பரலால் பெருமளவு மக்கள் உயிரிழந்த அடுத்த நாடாக பிரேஸில் காணப்படுகின்றது.

பிரேஸில் நாட்டின் தலைவரும் உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் வைத்திய நிபுணர்களின் அறிவுரைகளைப் பின்பற்றாது தான் நினைக்கும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார்.

இன்று பிரேஸில் நாட்டில் அதிகளவான கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாறான உதாரணங்கள் அதிகளவில் உள்ளன.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ளதும் அதேபோன்றதொரு நிலைமை தான். அரசை ஆளுபவர்கள் தாங்கள் நினைக்கும் வகையில் செயற்படத் தொடங்கியுள்ளனர்.

விசேட மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையிலும் நாடு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# மூன்றாவது தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அரசாங்கம் ஆராய்வு?



கொழும்பு, ஒக. 03

இலங்கையர்களுக்கு மூன்றாவது கொரோனா தடுப்பூசி செலுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படுத் தப்படுகிறது.

இலங்கையர்களுக்கு முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட பிறகும் மூன்றாவது டோஸ் வழங்கப்பட வாய்ப்புள்ளது என சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகமான வைத்தியர் . ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது தடுப்பூசி தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது, இன்ப்ளூவன்ஸா போன்ற எந்தவொரு வைரஸுக்கும் வருடாந்தம் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என்றார்.

இருப்பினும், வருடாந்தம் தடுப்பூசி செலுத்துவது தொடர்பிலான அவசியம் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை, உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் மருத்துவத் துறையில் மூன்றாவது தடுப்பூசி செலுத்துவதற்கான சாத்தியம் உருவாகியுள்ளது, மேலும் தேவைப்பட்டால் இலங்கையர்களுக்கு மூன்றாவது தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீஸா சேவை குறித்து இந்திய தூதரகம் விசேட அறிவிப்பு

கொழும்பு, ஒக. 03

வீஸா சேவைகள் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கை வருமாறு,

வீஸா மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பாக இலங்கை பிரஜைகளிடமிருந்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் பல்வேறு கோரிக்கைகளை பெற்றுள்ளது.

சாத்தியமான சகல வழிகளிலும் இக்கோரிக்கைகளுக்கு சேவை வழங்குவதில் உயர் ஸ்தானிகராலயமும், உத்தியோகத்தர்களும் வழமைபோலவே அர்ப்பணிப்புடன் உள்ளனர்.

2. இலங்கையில் தற்போது காணப்படும் சூழ்நிலை தொடர்பான உத்தியோகபூர்வ, (https://hpb.health.gov.lk/), தரவுகளுக்கு அமைவாக கோவிட் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கையும் உயிரிழப்புக்களும் துரதிர்ஷ்டவசமாக அதிகரித்த நிலையில் உள்ளதுடன் டெல்டா வகையான கொரோனா வைரஸ் உலகளாவிய ரீதியில் காணப்படும் நிலையிலும் பொதுமக்களின் நலன்களின் மீதான அக்கறை காரணமாக சூழலுக்கு ஏற்றவாறு அலுவலக கடமைகளை முன்னெடுப்பதற்கு உயர் ஸ்தானிகராலயம் தீர்மானித்துள்ளது.



இதன் காரணமாக வீஸா மற்றும் ஏனைய கொன்சியூலர் சேவைகளுடன் தொடர்புடையவை உள்ளிட்ட பொது மக்களுக்கான சேவைகளை பூர்த்திசெய்வதில் மேலதிகநேரம் செலவிடவேண்டிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

3. மேல் குறிப்பிட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு உயர் ஸ்தானிகராலயமிடமிருந்து வீஸா மற்றும் கொன்சியூலர் சேவைகளை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு அதற்கமைவாக செயற்பட வேண்டுமென அறியத்தருகின்றோம்.

4. பாதுகாப்பானதும், கொவிட் சூழலுக்கு உகந்ததுமான பயணங்களின் மூலம் இருநாடுகளுக்கும் இடையிலான மக்கள் - மக்கள் தொடர்பினை ஊக்குவித்து மிகவும் புராதனமானதும், நெருக்கமானதுமான நட்புறவை வலுப்படுத்துவதில் உயர் ஸ்தானிகராலயம் உறுதியான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில், பல நாள் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இலங்கை கடற்றொழிலாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்கு விதிகளை மீள் திருத்துவது தொடர்பாகவும், ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீன்களில் சுமார் 60 வீதத்திற்கும் அதிகமான மீன்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினால் கொள்வனவு செய்யப்படுகின்றன. அத்துடன், இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினால் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இதனால் ஐரோப்பிய சந்தைகளில் இலங்கை மீன்களுக்கு சிறந்த வரவேற்புக் காணப்படுகின்றது.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் துறைசார் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறிப்பிட்டுள்ளார்.

இதேசமயம், தடுப்பூசி ஏற் றும் திட்டத்தை மேலும் விரை வுபடுத்தும் நோக்கில் 24 மணி நேரமும் இயங்கும் தியத உயன மையம் நேற்று முதல் இயங்க ஆரம்பித்தது. இது தொடர்ச்சியாக மூன்று நாட்கள் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 70 ஆயிரம் பேர் அஸ்ட்ராசெனகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றனர். அத்துடன், அரச புள்ளிவிவரத்தின்படி, 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 நபர்கள் அஸ்ட்ராசெனகாவின் முதல் தடுப்பூசியை பெற்றுள்ளனர். 4 இலட்சத்து 55 ஆயிரத்து 151 பேர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர்.

80 இலட்சம் பேர் சினோபார்ம் தடுப்பூசியின் முதல் டோஸையும் 17 இலட்சம் பேர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu



## புதிய இந்திய துணைத்தூதர் யாழ்ப்பாணத்தில் பதவியேற்பு

யாழ்ப்பாணம், ஓக. 03

யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத்தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் இந்திய வெளியுறவு அமைச்சால் நியமிக்கப்பட்ட நிலையில் யாழ். மருதடி வீதியிலுள்ள இந்தியத் துணைத்தூதுதரகத்தில் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதராக இருந்த பாலச்சந்திரன் சுரினாம் குடியரசு நாட்டுக்கும் அதனோடு இணைந்து மூன்று நாடுகளுக்குமான இந்தியத் தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ள நிலையில், யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத்தூதராக ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர், கண்டியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் பணியாற்றி வரும் நிலையில் யாழில் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

(இ - 03)

## சூடாக்கப்பட்ட பால் பாத்திரத்தில் விழுந்து பெண் குழந்தை மரணம்

கொழும்பு, ஓக. 03

சூடாக்கப்பட்ட பால் பாத்திரத்தில் விழுந்து எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 3 வயது பெண் குழந்தை 13 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தது.

மெதிரிகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த எச்.எம்.ஓனாரா ஹிமியங்கி என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தது.

பாட்டியின் பராமரிப்பில் குறித்த சிறுமி வளர்ந்து வந்துள்ளது. இந்நிலையில் உணவுப் பண்டம் தயாரிப்பதற்காகப் பெரிய பாத்திரமொன்றில் பால் சூடாக்கப்பட்ட வேளை, விளையாடிக்கொண்டிருந்த குழந்தை குறித்த பாத்திரத்தில் தவறி விழுந்துள்ளது.

குழந்தை உடனடியாக மீட்கப்பட்டு மெதிரிகிரிய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையிலேயே, குறித்த பெண் குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று மரணமடைந்தது. (இ)

### சங்கானை பிரதேச செயலகம் முன்பாக

## வீட்டுத்திட்டத்தின் மிகுதிக் கொடுப்பனவை வழங்கக்கோரி சுழிபுரம் மக்கள் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 03

**ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்தின் மிகுதிக் கொடுப்பனவை வழங்குமாறு கோரி சங்கானை பிரதேச செயலகம் முன்பாக வீட்டுத்திட்டப் பயனாளிகள் நேற்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**



சுழிபுரம் மத்தி ஜே/173 கிராம சேவகர் பிரிவு மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“கடந்த 2018 மற்றும் 2019 காலப்பகுதியில் ஜே/173 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 45 குடும்பங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், குறித்த வீட்டுத்திட்டத்துக்கான நிதி எமக்கு முழுமையாகக் கிடைக்கப்பெறவில்லை. ஒரு பகுதி அளவு நிதி மட்டுமே எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. மிகுதி வேலைகளை நாங்கள் கடன்பட்டுத்தான் செய்துள்ளோம். இருந்தாலும் வேலைகளை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

எமது வீடும் முழுமை பெறாத நிலை ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் கடன் கொடுத்தவர்களின் தொல்லை என நாங்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றோம்.

இந்த வீட்டுத்திட்டம் எங்களுக்கு வழங்குவதற்கு முதல் நாங்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருந்தோம். ஆனால், இந்த வீட்டுத் திட்டமானது தற்போது எங்களைக் கடன் சுமையில் தள்ளியுள்ளது.

எனவே, உரிய தரப்பினர் எமது விடயத்தைக் கருத்தில்கொண்டு எமது வீட்டுத் திட்டத்தின் மிகுதி நிதியை சீக்கிரம் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்” - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (இ-03)

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, ஓக. 03

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் திருக் கோவில் குடிநிலம் செல்வவிநாயகர் ஆலயத்தின் முன்னால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் 50 இற்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்துகொண்டனர்.

“எங்கே எங்கே எங்களது பிள்ளைகள்?”, “ஒரு தாயின் கண்ணீர்ப் பயணத்துக்கு முடிவு கொடு”, “எங்கள் பிள்ளைகளின் முகம் காண வேண்டும்” போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வாறும்,



கோஷங்களை எழுப்பிய வாறும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (இ)

## சு.கவை விட்டு விலகியோர் எம்முடன் மீள இணையலாம்

### சாந்த பண்டார எம்.பி. அழைப்பு

கொழும்பு, ஓக. 03

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் நாம் இறங்கியுள்ளோம். கட்சியை விட்டு விலகியோர் எம்முடன் மீள இணையலாம். கட்சி என்ற ரீதியில் நாம் கௌரவத்துடன் அழைப்பு விடுக்கின்றோம்.”

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பி. சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்ற நடவடிக்கைகளை, நாட்டின் ஆறாவது ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஆரம்பித்துள்ளோம்.

அதன் முதற்கட்ட நடவடிக்கையாக மாவட்ட மட்டத்தில் கட்சியைப் பலப்படுத்துவற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம்.

இதற்கமைவாக காலி, புத்தளம், இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் கட்சியைப் பலப்படுத்துவற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் செயல்பாடுகள் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண சபைகளில் அங்கம் வகித்த உறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் வழமையைவிட மிகவும் அர்ப்பணிப்புடன் கட்சியை முன்னோக்கிக் கொண்டுச் செல்வதற்கான பயணத்தில் ஒன்றிணைந்துள்ளனர். இதனை நினைத்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

எனவே, கட்சியை மீளக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் மிகத் துரிதமாக முன்னெடுக்கப்படவுள்ளன.

அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று தலைவர்கள், தலைவிமாரை அழைத்து அவர்களுக்குத் தெளிவூட்டவுள்ளதுடன் கீழ் மட்டத்திலிருந்து கட்சியை கட்டியெழுப்புவதே எமது நோக்கம். கடந்த காலங்களில் கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பலர் கட்சியிலிருந்து தூரமாகினர். அவர்களும் எம்முடன் மீள இணையவுள்ளனர்” - என்றார். (இ)

## கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரை நேரடி விசாரணைக்கு அழைத்தது ரி.ஐ.டி.

கிளிநொச்சி, ஓக. 02

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதனை எதிர்வரும் 06 ஆம் திகதி கிளிநொச்சி, பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு கிளிநொச்சிப் பொலிஸாரால் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஊடகங்களுக்கு நேற்று தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் பலரும் கொழும்பு நான்காம் மாடியிலும், கிளிநொச்சியிலும் அமைந்துள்ள பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவின் அலுவலகங்களுக்கு விசாரணைகளுக்காக அழைத்து நீண்டநேரம் விசாரணைக்குட் படுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போது சபையின் தவிசாளருக்கும் விசாரணைக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

(இ - 03)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை - நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - சிங்கம்,நாடோடிகள் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை



மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு